சிலம்பு-கஎ] பிரமாதி—மார்கழி [பரல்-கூ

அறிஞர்களும் அவர்தம் வரலாறும்

[வித்துவான் அ. கிருட்டினமூர்த்தி]

உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும், அவற்றின் பிரிவுகளையும் எண்ணப் புகுந்தால் அவற்றை எண்ணி முடியாது; ஓய்வாக அமர்ந்து சிறிது கருதத் தொடங்கினும் அவையனைத்தும் கருத்திலகப்படுவதில்லை. அவற்றுள் எந்தப் பொருளை எடுத்துக் கொள்ளினும் அப்பொருளுக்கு இரண்டு பக்கங்களுண்டு; இது உருவப் பொருள்களுக்கே. ஆனால், பொதுவாக நோக்கின், எப்பொருளாயினும் அப்பொருளுக்கு நன்மை கொடுக்கும் தன்மையுண்டு; அதுவேபோல் தீமை தரும் பண்புமுண்டு. இவ்விருவகைக் குணங்களும் இல்லாத பொருளுமில்லை; அவை இவ்வுலகிலுமில்லை என்பது உண்மை.

இவற்றில் ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்குச் சேர்க்கையில்லையேல், அப்பொருளுக்கு உலகில் இயக்கமுமில்லை. அஃதாவது, எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று கூட்டுறவுடையதாயிருக்க வேண்டும்; அங்ஙனமன்றித் தனித்தியங்க முடியாதென்பதாம். இன்னும் சிறிது விளக்கமாகக் கூறினால், ஒரு பொருளின் நன்மை தீமைகளுக்கு மற்றொரு பொருள் உதவ வேண்டும்; மற்றொன்றின் நன்மை தீமைகளின் பயனை இப்பொருளும் பெறவேண்டும். இது முயற்சியில்லாமல் உலக இயக்கத்தின் போக்கில் நாடோறும் தானாக நடந்துவரும் ஓர் இயற்கை நிகழ்ச்சி. இந் நிகழ்ச்சி தடையுறின் உலகத்தில் இயக்கமில்லை. இயக்கமில்லாத இடத்தில் எந்தப் பொருளும் எவ்விதமாக இருக்குமென நம்மால் கருதுவதற்குமில்லை. "அமைதி" என்ற ஒரே சொல் தவிர வேறொன்றைக் கூறவும் முடியாது.

நிற்க, இவ்வாறு பொருள்கள் ஒன்றோடொன்று இயைபுற்று அவ்வவற்றின் நன்மை தீமைகளைப் பரிமாறிக்கொள்வதில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் சில உயர்நிலை யடைதல் கூடும்; பல அதற்கு மாறாகக் கீழ்நிலை பெறுதலும் உண்மை. இவ்வியக்கத்தின் போக்கு, எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதைத் திட்டமாகக் காட்டவில்லை; ஆனால் அறிவுடையுயிர்கள் மட்டில், அதிலும் ஒரு சிறு பகுதி மட்டில், தம் அறிவால் சிறிது கருதிக்கொள்ள இடந்தருகின்றது; அஃதாவது உலகத்தின் இயக்கம், அதிலுள்ள பொருட்களின் அறியாமையைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு, அதன் மேல் பல வேறு உருவத்திலும் நடந்து செல்லுகின்றது. இடையிடையே அதன் கண்ணில் எதிர்ப்படும் காட்சிகள் பல; அவற்றுள் மெய்யான இன்பமுடையன சில; ஆனால் துன்பப்படுவன மிகவும் பல. இவ் வின்பமும், துன்பமும் வாழ்க்கை என்னும் ஏட்டில் பலநிற மைகளால் படம் பிடிக்கப்படுகின்றன; பற்பல எழுதப்படுகின்றன; சிற்சில தீட்டப்படுகின்றன; மற்றும் சில உருவங்களாக நாட்டப்படுகின்றன; ஏனைய கண்ணிற் படாது, கருத்திலும் நில்லாது மறைகின்றன; இவ்வாறு அவை பொறிக்கப்படும் முறைகள் சாலப் பல; இது காலத்தின் கடுமை.

இனி, இன்பதுன்பங்களைப் பெற்றுணரும் பொருள்களுள் மிகப் பரிவும் பொறுப்பும் உடையனவாய் விளங்குவன உயிருடைப் பொருள்கள்; அவ்வுயிரெல்லாம் இன்பத்தையே விரும்புகின்றன அதற்கென்றே போர் செய்கின்றன; இப் போர் நாடோறும், நொடிதோறும் இடையீடின்றி நடப்பது யாருமறிந்த செய்தி. உயிர்கள் என்று தோன்றினவோ அன்றே இப்போரும் தொடங்கியது; இது சில காலத்தில் கடுமையாக நடந்தது; பிறகு பையப் பையவும் நடப்பதாயிற்று; இஃது அதன் வளர்ச்சியில் ஏற்பட்ட வேற்றுமை.

பழைமையிலேயே இயற்கையினாலும், முயற்சியினாலும் ஏனையுயிர்களினும் உரனும் திறனும் படைத்தான் மனிதன்; ஏனைப்பொருட்களை அனைத்தினும் வென்றான்; வென்றவன் எழுந்தான் உயர்நிலைக்கு. ஏனைய தாழ்ந்தன என்பது மிகையே.

இங்ஙனம் இயற்கையில் தோன்றிய வாழ்க்கைப் போரில் வென்றி மேம்பட்ட மனிதன், அதனுடன் அமையவில்லை; மேலும் வந்து சூழ்ந்த பல இடையூறுகளையும் தன் முயற்சி, ஊக்கம், உழைப்பு என்ற கருவிகளால் அழித்தான். கல்வி,

அறிவு, ஒழுக்கம் என்ற நாடுகளைக் கைப்பற்றினான். அவற்றை நாடோறும் தீமை கடிந்து நன்மை துலக்கி வளப்படுத்தினான். அதனால் வரக்கடவ பயன்கள் யாவும் இவன் இருக்கை தேடி வந்தன ; வந்தன போதுமென்று நில்லாமல் அவன் போக்கு மேம்பட்டுச் செல்லுகின்றது ; இனியும் அவ்வாறே செல்லும். அதன் முடிபு யாதென்று இப்பொழுது கூறமுடியாது. இப் பகுதியில் போர்தொடுத்து வென்றியடைந்தான் என்று எளி தாகக் கூறிவிட்டோம் ; ஆயினும் அவன் அங்ஙனம் வரவில்லை. எண்ணிறந்த தொல்லைகளையும், அருஞ் செயல்களையும் அவன் தாண்டி வந்திருக்கிறான். இஃது இன்று நேற்றன்று ; இந் நாட்டில் மட்டுமன்று ; எந்நாட்டினும் எக்காலத்திலும் இங் ஙனமே நிகழ்ந்தது. இஃது அறிஞர் யாரும் அறிந்தது.

சுரங்கத்தில் சென்று பொன்னெடுக்கப்போய் மண்ணிலே மடிந்தவர் பலபேர். கடலுக்குள் இறங்கி முத்தெடுக்கப்போய் மூழ்கிப்போனவர்கள் பலபேர். வானத்தில் பறக்க வழி செய்யச் சென்ற பெரியோர் அவ்வானத்திலேயே தம் ஆவி துறந்த செய்தி மிகப் பழையதன்று. வெயில் நுழைந்தறியாத மாபெருங்காடுகளில் நுழைந்தும், வெப்பம் என்பதே அறி யாத கடும்பனி மூடிய மாமலைமேல் ஏறியும் ஊடுருவி ஆராயத் தொடங்கியவர் பலர் ; அவருள் உயிர் பிழைத்து மீண்டவர் சிலரே; ஏனையர் மூடுபனியால் மூடப்பட்டனர் ; அரிமாவின் வாயில் அகப்பட்டனர் ; கொடுநோயால் உடல் மெலிந்தனர் ; உயிர்க்காற்றில்லாமல் உயிரையே விடுத்தனர் ; இவர் தொல்லை களின் திறம் சொல்லி முடியாது.

நியூட்டன் சிறைக்கோட்டம் புகுந்தார் ; ஏன்? கலீலியோ கண்ணை யிழந்தார்; எதனால்? இவர்களை அடிப்படையாகக் கொண்டு முன்னேறிச் சென்றவர்களில் தூக்கிலிடப்பட்ட வரும், படுகொலையிலகப்பட்டவரும், நெருப்பிலிடப்பட்டவரும் மாய்ந்து போயினர் ; அவர்தம் கல்லறையில் முளைத்த புல்லும் பலகால் மடிந்தன ; ஆனால் அவர்தம் அறிவின் உருவம் இரவில் ஒளியாக இருக்கின்றது ; வானத்தில் ஊர்தியாக இருக்கின்றது ; நீருக்குள் கணையாக இருக்கிறது ; நிலத்துக்குள் நகராக இருக் கின்றது ; அறிஞர் உலகில் அறிவாகப் பரிமளிக்கின்றது ; சுருங்கக் கூறின் வாழ்க்கைக் கருவிகளின் ஒவ்வொரு பகுதியி லும் தனித்தனி யுருவுடன், நின்று நிலவுகிறதெனக் கூறி விடலாம்.

பெருந்தன்மையும் பேராற்றலும் படைத்த பெருமக்கள் **ஆபிரகாம் லின்கன், வாஷிங்டன்** என்னும் இருவர். இவர்தம்

கல்லறையின் மீது கட்டப்பட்டது இன்றைய அமெரிக்க வுலகம். ஆறாயிரம் கல்லுக்கு அப்பாலிருந்த **அமெரிக்கநாடு** ஏழைக் **கோலம்பசின்** காலடிபட்டதும் பொன்னாடாக மாறியதை மறக்க முடியுமா? அல்லது மறுக்க முடியுமா என்பதைக் கருதிப் பார்மின்!

கரிபால்டியின் குருதிக் கறை இத்தாலியைவிட்டு இன்னும் மறையவில்லை. சீனநாட்டு **சன்யாட்சேனும்,** உருஷ்ய நாட்டு **இலெனினும்** இன்று இலராயினார். ஆனால், அவர்தம் திட்டத்தின் ஆற்றல் இன்று வெற்றியுடன் வேலைசெய்கிறது. அயர்லாந்தின் விடுதலைக்கு அல்லும் பகலும் அடிகோலிய **மைக்கேல் காலின்ஸ்** மாய்ந்துபோனான்; அவனுடைய நண்பர் **டிவேலரா** இருக்கிறார் இன்றும்; வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள், அவர்கள் பட்டறியும் பாட்டை.

இவையெல்லாம் பிறநாட்டுச் செய்திகள். பலநூற்றாண்டாக வேற்று நாட்டவர்க்கு அடிமைப்பட்ட நம்தமிழ்நாட்டைப் பார்மின்! அதனையொட்டி இவ்விந்திய நாட்டையும் பார்மின்! இவற்றிற்கென உயிர் துறந்த வல்லாளர் தம் பயனை, நாம் இன்று களிப்போடு நுகர்கிறோம் என்ற கருத்தையும் சிறிது கருதிப் பார்மின்; மேற்கூறவேண்டுவன யாவும் நம் பார்வைமுன் வந்து நிற்கும்.

இங்ஙனம் அறிவினும், திருவினும், அரசியலினும் மக்கள் நல்வாழ்வு பெறுதற்குப் பட்ட இன்னல்களின் எல்லை வரம்பறிய முடியாத ஒன்று. இவற்றையெல்லாம் எவ்வாறு அறிந்தோம்? அவ்வந் நாட்டுவரலாறுகளால், ஆன்றோர்தம் வரலாறுகளால் அறியவில்லையா?

இங்ஙனம் மூளையுருக, நெஞ்சுவற்ற, நாவறள, உயிர்போக, உடல்தளர இன்பந்துறந்து துன்பமுற்ற பெரியோர்கள், தம் குருதியும் வியர்வையும் நமக்கு இன்பம்பட மாற்றிக் கொடுத்தனர்: நாம் அவற்றைப் பெருமிதத்துடன் நுகர்கிறோம் இன்று.

இவற்றை எல்லாம் கற்கின்ற நன்கு பண்பட்ட ஓர் இளைஞன் உள்ளம் எதிர்காலத்தை வரையறுப்பதில் செல்லுமென்றால், அதில் புதுமையுமில்லை, வியப்புமில்லை. இன்று நுகரும் இன்பங்கள் யாவும் அடுக்கிவந்த இன்னல்களின்மேல் எழுப்பப்பட்ட கட்டிடங்கள்; அவற்றில் நாம் வசித்துவருகிறோம் எனவே, இனிமை என்ற ஒன்று துன்பத்தினின்றே பிறக்கிறது; துன்பமில்லையேல் இன்பத்திற்குப் பெருமையில்லை; அதன் அருமையும் புரிவதில்லை. ஏன்? கொடுவெயிலும்

நள்ளிருளும் இல்லாமற் போயின், நிழலருமையும், ஒளி யருமையும் தெரியாமற்போகும். கரும்புக் கட்டியின் சுவையைக் காட்டுவது கடுக்காய்; ஆதலான் துன்பத்தின் வழியாக வரும் இன்பமே சிறந்தது; அல்லாத இன்பம் அருமை தெரியாத ஒன்று, அருமையில்லாப் பொருளுக்குப் பெருமையு மில்லையாதலான்.

இங்ஙனம் அரிய பொருள்களை நுகர்தற் பொருட்டு உயரிய குறிக்கோள்களை உளத்தேவைத்து மெய்ம் முயற்சியும், மெய்யூக்கமும், மெய்யுழைப்பும் கொண்டு ஒவ்வொரு தமிழினுனும் முன்னேறிப் போக முயலவேண்டும்.

இடையூறுகள் ஒன்றன் மீதொன்று அடுக்கி வருமாயின், அவற்றை அவ்விடையூறுகொண்டே களைதல் வேண்டும். திருடனைத் திருடனைக்கொண்டு பிடிப்பது எளிது; யானையை யானையைக் கொண்டு பிடிப்பது வழக்கம்; இரும்புக்கு இரும்பும், வயிரத்திற்கு வயிரமும் அறுக்கும் கருவிகள் என்பது அன்றுடம் அனைவரும் கண்ட காட்சி. ஆகவே இன்னல்கள் எண்ணில்லாமல் பெருகி வருமாயின் அஃது இன்பம். சுருங்கக் கூறின் இன்னலில் பிறப்பது இன்பம். தீமையிற்பிறப்பது நன்மை. வழக்கில் பிறப்பது சட்டம்; இனி, சேற்றிலே பிறந்தாலும், முள்ளிலே யிருந்தாலும், தாமரையும் தாழையும் அழகு மணங்கமழ்வதில் குறைவதில்லையே! எனவே, முன்னர் எடுத்துக்காட்டிய பேராண்மையாளர் வரலாறெல்லாம் நம்மை உட்காரவைக்கவல்ல, ஊக்குவித்தற்காக இருக்கின்றன என அறிதல் வேண்டும்.

இவ்வழியே சென்ற பெரியோர்களின் வரலாறுகளும் பிறவும் ஏனைநாட்டினரால், சிறப்பாக மேனாட்டினரால், பெருவாரியாகச் சேமிக்கப்பட்டு அழகிய உருவில் வெளிவருகின்றன. அவற்றிற்கெனச் செய்யப்படும் செலவும், எடுக்கப்படும் முயற்சியும் அளவிறந்தன. எத்தனை எத்தனைப் பதிப்புகள்! எத்தனை எத்தனை வகைகள்! என்ன அழகிய கட்டு! வனப்புடை வரிசை! கண்ணின் காட்சி! கருத்திற்கு விருந்து!—இவை எவ்வாறிருக்கின்றன என எடுத்துக்கூறுமாறில்லை அத்தனை யழகாக அவை வெளிவருகின்றன.

ஏனை நூல்களும் இங்ஙனம் வருகின்றனவாயினும், இப்பகுதியைமட்டில் கூறவேண்டுவ தென்னையெனில், இன்றைய தமிழ் நாட்டில்—தமிழுலகில், தமிழிளைஞர்கட்கும், தமிழறிஞர்கட்கும் உண்மையான உழைப்பும் நோக்கமும் வரவேண்டு

மாயின், அவர்கள் இங்ஙனமெல்லாம் உழைத்துப்பட்ட உரவோர்களின் வரலாற்றைப் படிக்க வேண்டும். கிளர்ந்தெழும் ஊக்கமும், தளராத ஆசையும், மெய்யன்பும் தமிழினிடத்திலும், தமிழரிடத்திலும் விளைதல் வேண்டும். பிறரால் ஏமாற்றப்படினும், பழிக்கப்படினும், தீங்கு செயப்படினும் அசையாது வந்த திண்ணிய நெஞ்சம் அமைய வேண்டும். அவர் தம் செயல்களை அகத்துள் நகைத்துப் புறத்தே காட்டாது செயன்மூலம் தான் ஒரு நன்றாற்றும் வினைஞன் என்பதை விளக்கவேண்டும். அதனால் அவர் இன்றில்லையேனும் நாளையேனும் தமக்குள் எண்ணி நாணவேண்டும். இங்ஙனம் செய்து வினையின்கண் கருத்துடையராய்ப் பயனடைந்த பெரியார்தம் வரலாறுகளைப் பலகாலும் மீண்டும் மீண்டும் பயிலப் பயிலப் படிக்க வேண்டும். அவர்கள் வாழ்வுக்காலத்தில் என்ன செய்தனர்? அவ்வாழ்வினை எவ்வாறடைந்தனர்? தாழ்வுக்காலத்தை எப்படிக் கடத்தினர்? அந்த நிலைக்கு அவர்கள் ஏன் வரவேண்டும்? இடுக்கண் நேர்ந்தபொழுது என்ன செய்தார்கள்? எவ்வாறு தப்பித்துவந்தனர்? யார் யார் எவ்வெந் நோக்கத்துடன் எவ்வெவ்வழியில் முயன்றனர்? அவற்றுள் எவையெவை எதனால் சிறந்தன? அவற்றுள் யார்யார் தோல்வியுற்றனர்? எந்த அளவுக்கு வெற்றியடைந்தனர்? அவற்றிற்குக் காரணமென்ன? என்பனபோன்ற பல ஆராய்ச்சி நோக்கங்களும், தன்னறிவுக்கு ஒரு வேலையும் உண்டாகுமாறு உற்றுநோக்கிக் கற்றல் வேண்டும். அதற்கேற்றவாறு, நம் வாழ்க்கையைச் செப்பஞ் செய்து பள்ளத்தினின்று மேட்டிலேறி ஏனையரையும் கைகொடுத்து மேலேற்றவேண்டும். இதனால், தானுயர்வதில்லை; பிறர் உயர்வதுமட்டுமல்ல; அவன் புகழ் என்றும் நின்று நிலைக்கும் என்பதையும் ஒவ்வொரு தமிழ்மகனும் அறிய வேண்டும். ஆதலின், எதிர்காலத்தில் தம் வாழ்க்கையை உலையா முயற்சியுடன் நன்னெறியிற் செலுத்தற்பொருட்டுத் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் நோக்கங் கொண்ட தமிழர் அனைவரும் துயர்க்கடலிற் குளித்தெழுந்த பெரியார் வரலாறுகளைப் படித்தறிய வேண்டுகிறேன்.

இவ்வகைய நூல்கள் பிறமொழிகளில், அவரவர் வரலாறு உள்ளது உள்ளவாறு, அவரவராலேயே பலப்பல எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் இந்நாட்டில் பண்டுதொட்டு அத்தகைய வரலாறுகள் எழுதப்படும் பழக்கம் அடியோடு இல்லாமற் போயிற்று. அது மிகவும் இரங்கத்தக்கது. பெரிய புராணம், புலவர் புராணம், குருபரம்பரைப் பிரபாவம், இரகுவமிசம் முதலான நூல்களில் அடியார்கள் பலரின் வரலாறு

கள் மிகச் சுருங்கிய அளவிற் கூறப்பட்டுள்ளன. மன்னர்கள் வரலாறும் அங்ஙனமே. இவையெல்லாம் அவரவர் காலத்தில் அவரவர் தத்தம் கையினுல் எழுதாமல் அல்லது அவர் காலத்திருந்த பிறர்பிறரால் எழுதப்படாமல் பல நூற்றுண்டுகளின் பின் வந்தோரால், வாய்மொழியாக வந்த செய்திகளையும், தங்கள் கற்பனைச் செய்திகளையும் சேர்த்து அவற்றினுசிரியர்களால் மெய்யும் பொய்யுமாக விரவி எழுதப்பட்டிருக்கின்றன வன்றி, மெய்யானவை என்று முழுமையும் கொண்டாடுவதற்கில்லை. கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், தனிப்பாடல்களும், பாட்டினிடையில் சிற்சில வரிகளும் சிற்சிலரைப் பெயர், அல்லது ஊர், அல்லது புலமை, ஆட்சி முதலிய சிறப்புக்கள் ஆகிய இவற்றில் தெளிவுபடுத்துகின்றனவன்றிப் பிறிதி யாதும் அறியுமாறில்லை. தவறி இரண்டொரு குறிப்புக்கள் காணக்கிடைக்குமாயின் அவை நம்புதற்குமில்லாமற் செய்திருக்கின்றனர். சிறந்த புலவராக விருப்பின், அவர் எங்ஙனம் கற்றார், எங்ஙனம் பாடினார், எவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு கூற்றையும் கடந்தார்? ஓர் அரசனுயின் அவன் யார்! யாருக்குப் பிறந்தான்? எங்ஙனம் நாடாண்டான்? எத்துணை காலம் ஆண்டான்? என்பனபோன்ற பல உலகியல் நிகழ்ச்சிகளை உள்ளவாறு கூறுவதின்றிக் கற்பனையாகக் கூறிக் கூறிக் கற்போரின் அறிவை மழுங்கச் செய்தமையன்றிக் கண்ட பயன் ஒன்றுமில்லை. ஒரு புலவன் நன்கு பாடினுல் அங்ஙனம் பாடற்குக் காரணம் அவன் நாக்கில் கலைமகள் அல்லது காளி வந்து அவன் கனவில் தோன்றி எழுதிவிட்டுப் போனுள்! "கருணை! கடாட்சம்!! மந்திரம்" என்று கூறிவிடுவார்களே யல்லாமல் அவன் பட்ட வருத்தத்தையும், பயின்ற முறைகளையும் கூறுவதில்லை. ஒரு செங்கோல் மன்னனைக் குறித்துக் கூறினுல், அவன் ஓர் எளிய அரசனுயினும் உலகுக்கிறைவன்! நிலமகளும் பூமகளும் ஒரு குடைக்கீழ் நின்றனர் என்றெல்லாம் விரித்துரைப்பார்கள்! அவனுட்டுக் குறைகளையும், மக்கள் நிலையையும் தெளிவுபடக் கூறுவதில்லை. ஒரு பெரியாராயின் அவர் தவஞ்செய்து இறைவனுர் அருளால் ஆயிரம், பல்லாயிரம் ஆண்டுகள் இருந்தார் என்றெல்லாம் கற்பனை செய்து செய்து நல்வாழ்க்கைகளின் போக்கை மறைத்துவிட்டனர். இவையெல்லாம் பெருமை எனக் கருதினுர்கள் அக்காலத்தில். அன்றியும் வாழ்க்கையைப் பற்றிய வரலாறு எழுதுவது என்னும் பழக்கமே இல்லாமல், சொல்ல வேண்டிவரும் இடங்களிலே குறிப்பாகச் சொல்லிவிட்டுப் போவதன்றி, அங்ஙனம் எழுதுவதைப் பெருமைப்படுத்திக்கொள்வதாகவுங் கருதினுர்கள். தன்னுடைய கல்வி, அறிவு,

ஒழுக்கம் முதலிய ஏதாவதொன்றில் இன்றியமையாது சொல்லவேண்டிய விடத்தில் தற்காப்புக்காக இரண்டொன்று கூறினும் அதைத் தற்புகழ்ச்சியாகக் கருதிப் பழித்துரைக்கவும் தொடங்கினர். இங்ஙனம் பிறர் எழுதினால் அல்லது கூறினால் பழித்துவிட்டுத் தாமாத்திரம் அகத்தில் கல்விச் செருக்குற்று வாழ்ந்த இடைக்காலப் பிற்காலப் புலவர்கள் பலரே இவருள் இச்செருக்கால் காழ்ப்பேறிக் கொலை பலவும் புரிந்ததாகவும் அறியக்கிடக்கின்றது ; ஆனால் உண்மை தெளியுமாறில்லை. இதற்கே இங்ஙனமாயின் தன் வாழ்க்கையைத் தானே எழுதுவதென்ற நிலையிருந்திருப்பின், ஒவ்வொரு புலவரும் ஒவ்வொரு வாள்வீரராக மாறி யிருப்பர் என்றே கருதக்கிடக்கின்றது. இவையெல்லாம் பிற்காலச் செய்திகள். இவையெல்லாம் கடந்த நூற்றாண்டுவரை நிகழ்ந்தனவாயினும், இந்நூற்றாண்டினும் இங்ஙனம் புறக்கணித்தலும் செருக்குதலும், பழித்தலும் போன்ற இழிகுணங்கள் தமிழுலகை விட்டு முற்றும் அகன்றுவிடவில்லை. மேனாடுகளில் ஒவ்வொரு வினைஞனும்தான் இளைஞனாயிருக்கும் போழ்தே தன் வாழ்வு முழுமையும் எவ்வாறு கழித்தல் வேண்டும், நாம் இறந்தபின் நமக்குப் பின் என்னென்ன பொருட்கள், என்னென்ன செய்திகள் நின்று நிலவ வேண்டும் என்பனபோன்ற பலப்பலவற்றை எண்ணிப்பார்த்து, யான் இறந்ததும் என்னைக் குறித்து இன்னின்னார் இன்னின்ன வகையில் இங்ஙனம் எழுதுவர், அல்லது இங்ஙனம் கூறுவர் என்றெல்லாம் திட்டஞ்செய்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல திட்டத்தைச் செய்தித் தாள்களிலும் வெளியிடுகின்றனர். இச்செய்தி இந்நாட்டில் நிகழுமானால் அடுத்த நாள் பொதுமேடைகளிலோ, அல்லது குழுக்களிலோ அல்லது வீட்டகத்திலோ அவனைக்குறித்து என்னென்ன வகையிற் பேச்சுக்கள் வெளிவரும் என்பதை விவரிக்க வேண்டுவதில்லை. அஃதாவது ஊக்க மூட்டுவதும், ஒருவனுடைய உண்மையான அறிவைக்கண்டு மதித்து அதற்கேற்ப உதவிக் கைகொடுப்பதும் ஒருசிறிதும் கண்ணியமான முறையில் நடைபெறுவதில்லை. பொதுவாக உலகெங்கும் இஃது ஓர் இயற்கை யாயினும், இந்நாட்டில் இஃது ஒரு தவக்குறை என்றே கூறவேண்டும். உணர்ச்சியும் ஊக்கமும் இல்லாத இந்நாட்டின் நிலை அறிஞர்களை எந்த நிலைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நினைக்கும்போழ்து அஞ்சாமலிருக்க முடியவில்லை.

இது நிற்க, இனியேனும் இந்நாட்டுத் தமிழறிஞர்கள், தமிழிளைஞர்கட்கும், பின் வருவோர்க்கும் நற்பயன் தரக்கூடிய

பல அரியவான தம் வாழ்க்கை வரலாறுகளை எழுதித் தம்மால் இயலும் வகையில் வெளியிட வேண்டுகிறேன். வாழ்க்கை வரலாறெழுதுவதில் முதன்மையாகக் கருதப்பட வேண்டுவதொன்றுண்டு. ஒருவர் தாமெழுதும் செய்திகள் இழிவாக, பழிப்பாக இருப்பன என நீக்கி விடுதலும், உயர்வு கருதிப் புனைவு செய்தலும் ஆகிய இரண்டையும் நீக்கி உண்மை மாறாது நடுநிலை நின்று எழுதுதல் வேண்டும். இது வாழ்க்கை வரலாற்றில் ஏற்படும் இயற்கையான ஒரு குறை. இந்நாட்டிற் பெரியார் பலர் இன்றும் ஆன்றவிந் தடங்கியோர் போல அறிவு முதிர்ச்சியுற்றும், அத்தகைய திருவினை இளமையிலேயே எய்தக்கூடிய இளவல்கள் இருந்தும் கைநீட்டித் தாங்குவாரின்மையின் கைவிட்ட மகவுபோல நாடோறும் கையறவு கூறி நிற்கும் நிலையிலிருக்கின்றனர். கூட்டிலடைபட்ட குருளையும் பெட்டகத்தில் பட்ட மலரும் இரங்கத்தக்கன என்பதைச் சுட்டிக் கூறவும் வேண்டுமோ! எனவே அவரெல்லார்க்கும் நல்லுதவி கிட்டி, வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுவார்களாக! கடப்பாடுடையோர் அவற்றைப்போற்றி அவற்றின் வழி ஒழுகும் பிறரைப் போற்றிக் கொள்வார்களாக!

"இந்தியப் பல்கலைக் கழகங்களிலெல்லாம் தாய்மொழியையே பயிற்றுமொழியாகக் கைக்கோடல் வேண்டும்......
......தமிழர் ஒவ்வொருவரும் தமிழிலேயே பேசவேண்டும். தெலுங்கர் தெலுங்கிலேயே பேசவேண்டும். இவ்வாறு பேசுவதால் நாளாவட்டத்தில் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுதல் கூடும். துஷ்யந்தனும் சகுந்தலையும் வெவ்வேறு மொழிகளிற் பேசியே தம்காதலை யறிவித்து மணந்துகொள்ளவில்லையா? இருவேறு மொழிகளில் சுயம்வரமும் தாம்பத்யமும் இயலுமானல் உரையாடல் நிகழ்வதில் என்ன கஷ்டம்?"

—புலுசு சாம்பமூர்த்தி

தமிழில் முடியுமா?

[இசைச் செல்வர் திரு. தி. இலக்குமண பிள்ளை அவர்கள்]

கருநாடக சங்கீதத்தில் உயர்தரமான இசைப்பாக்கள் அல்லது கீர்த்தனங்கள் சென்ற பத்தொன்பதாவது நூற்றுண்டின் இறுதிவரைக்கும் பெரும்பான்மையாகத் தெலுங்கு மொழியிலேயே இருந்து வந்தனவென்பது மறுக்கலாகாத உண்மையே. ஆனால் இதன் காரணத்தை ஆராயப்புகுவோம். சென்ற நூற்றுண்டின் முற்பகுதியில் சங்கீதத்திற் றலைசிறந்த திறமையும் புலமையும் வாய்ந்து உயர்தரச் சங்கீத சாகித்தியங்கள் இயற்றும் வல்லமை பொருந்தி, அழியாப் புகழ்பெற்ற இசைப்பாவலர் அல்லது வாக்கேயரான ஸ்ரீ தியாகய்யர் அவர்கள் தெலுங்கு மொழியில் சாகித்தியங்கள் இயற்றியுள்ளார். அவர் தெலுங்கராய்ப் பிறந்ததால் தெலுங்கில் சாகித்தியங்கள் இயற்றினமை இயற்கையே. அச்சாகித்தியங்கள் உயர்வும் செப்பமும் பக்திச் சுவையும் உடையனவாதலால் பூவைப் பற்றிய நாரும் மணம் பெற்றதுபோல், அவற்றால் தெலுங்கு மொழிக்கே ஒரு புதுச்சிறப்பு உண்டாயிற்று; அச்சாகித்தியங்களின் வனப்பில் ஈடுபட்ட பிற்காலத்துத் தமிழர் சிலர் தெலுங்கிற் சாகித்தியங்கள் இயற்றுவதே மேன்மை யென்றெண்ணி அவ்வாறு செய்யத் தலைப்பட்டார்கள். அத்தமிழரில் இருவர் ஸ்ரீ பட்டணம் சுப்பிரமணிய அய்யரும், இராமநாதபுரம் (பூச்சி) ஸ்ரீநிவாச ஐயங்காருமாம். இவர்கள் தமிழராய்ப் பிறந்தும் தமிழைப் புறக்கணித்து சாகித்தியம் இயற்றுவதற்குத் தெலுங்கை மட்டும் கைக் கொண்டமையால் உயர்தரமான சாகித்திய விஷயத்தில் தமிழுக்கும் பெருஞ்சேதம் விளைந்தது; கருநாடக சங்கீதப் புலமையிலும் ஆராய்ச்சியிலும் பெரியரான ஸ்ரீ எம். எஸ். இராமசாமி அய்யர் அவர்களின் கொள்கை இதுவே. அதன் பின் தெலுங்குதான் உயர்தர சங்கீத சாகித்தியங்களுக்குப் பொருந்தும் மொழியென்ற ஓர் இழுக்கான தோரணை பரவத் தொடங்கிற்று. ஆனால் தெலுங்குமொழியில் சாகித்தியங்கள் இயற்றிய ஸ்ரீ தியாகய்யர் தமிழராய்ப் பிறந்து தமிழில் சாகித்தியங்கள் இயற்றியிருந்திருப்பரேல் இப்போது அவருக்குள்ள கீர்த்தியும் அவருடைய கீர்த்தனங்களைக் கற்றுப் பாடுவதில் ஜனங்களுக்குள்ள ஆர்வமும் சற்றுங் குறைவுபடாது; ஏனெனில் அவருடைய சாகித்தியங்களின் வசீகரத்திற்குக் காரணம் அவருடைய அபூர்வ சங்கீதத் திறமையேயன்றித் தெலுங்கு மொழியின் தனிச் சிறப்பல்லவென்பது ஆராய்வோர்க்கு எளிதிற் புலப்படும். தென்னிந்தியாவில் ஸ்ரீ தியாகய்யர் கீர்த்

தனங்களைப் பாடும் சங்கீத வித்வான்களும் ஏனையோரும் பெரும்பாலும் அக் கீர்த்தனங்களின் பொருளை உணர்ந்து கொள்ளாமையும் தெலுங்கு மொழியைக் கற்க வேண்டுமென்ற அவா சிறிதும் இல்லாமையுமே அதற்குச் சான்று பகரும். அன்றியும் அவர்களை யீழுத்து வயப்படுத்தும் காந்தம் அக் கீர்த்தனங்களில் உள்ள சங்கீத நயமும் சுகமுமே யன்றி அவற்றின் வெளிப்போர்வையாகிய மொழியன்று என்னும் உண்மை எளிதில் உய்த்துணரக் கிடக்கின்றது.

தமிழில் முடியும்

தமிழ்மொழி உயர்தரச் சங்கீத சாகித்தியத்திற்கு இசைவ தன்று எனக்கூறல், தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் ஆழக் கற்று, அவற்றின் அருமை பெருமைகளை அனுபவித் தறியாதவரின் இழுக்குரை யென்றே முடிவு கட்டலாம். அம் மொழி இயற்கையாகவே இனிமை யுடையதென்ற கொள்கையைத் தமிழ் என்னும் சொல்லே. "தமிழ் தழீஇய சாயலான்" முதலிய பண்டையோர் சொல் வழக்கில் இனிமை யென்று பொருள் படுவதிலிருந்தும் அனுபவத்தாலும் உணரக் கிடக்கின்றது. தெலுங்கில் சங்கீத சாகித்தியங்கள் உண்டாவதற்குச் சற்று முந்தியும் ஒத்த காலத்தும், பிந்தியும் தமிழில் அவ்வகைச் சாகித்தியங்கள் உண்டாய் இருந்தன வென்பதற்கு முத்துத் தாண்டவர் பதங்கள், அருணாசலக் கவிராயரின் இராமாயணக் கீர்த்தனங்கள், கனம் கிருஷ்ணய்யர், கவிகுஞ்சரம், கோபாலகிருஷ்ண பாரதியார், இராமசாமி சிவன், மகாவைத்தியநாதையரின் தமயனார், திருவிதாங்கூர் க்ஷீராப்தி சாஸ்திரிகள், நீலகண்டசிவன், வேதநாயகம் பிள்ளை முதலியோரின் கீர்த்தனங்கள் * ஏராளமாய்ச் சாட்சி பகரும். ஆனால், இக் கீர்த்தனங்கள் கருத்துயர்வில் ஸ்ரீ தியாகய்யரின் கீர்த்தனங்களுக்குச் சற்றும் பின்னிடுவனவல்லவாயினும் சங்கீதச் சுவையிலும் நுட்பத்திலும் அவற்றிற்குக் கீழ்ப்பட்டனவென்பது உண்மையே. ஆனால் அக் குறைபாடு மொழியைப் பொறுத்த தன்று. ஸ்ரீ தியாகய்யரை ஒப்புநோக்க மற்றவர்கள் சங்கீதத் திறமையின் தாழ்ச்சியைப் பொறுத்ததென்பது தெளிவு; சங்கீதப் பாவன்மை மிகுந்த ஸ்ரீபட்டணம் சுப்பிரமணிய ஐயர் இராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலியோருடைய சுய மொழிப்பற்றின் குறைவாலும், சலி இன்மையாலும் உயர்

* ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர் காவடிச் சிந்து, அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து, அருணகிரிநாதர் திருப்புகழ், சுப்பராய நாயகர் கிளிக்கண்ணி.

தரச் சங்கீத சாகித்திய விஷயத்தில் தமிழுக்கு நேர்ந்த விபத்தைப் பற்றி முன்னமே கூறிவிட்டேன்.

மற்றவைக்குக் குறைந்ததன்று

பொதுவாகத் தமிழ்மொழி இனிமையிலும் உருக்கத்திலும் பக்தி உணர்ச்சியை நெஞ்சிற்றுளும்பவைக்கும் ஆற்றலிலும் உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வன்மையிலும், மற்றெம் மொழிக்கும் பின்னிடாதென்ற உண்மையைத் **தேவாரம், திருவாய்மொழி, திருவாசகம், சேக்கிழார் பாடல், திருவருட்பா, வேதநாயகம் பிள்ளை பாடல்** ஆதியான ஆத்ம உணர்ச்சியையும் பக்தியையும், உண்மையான மானிட அனுபவத்தையும் நாட்டன்பையும் கடல் மடை திறந்தவாறு எழுப்பும் திவ்ய நூல்கள் இசையொடு பொருந்தாமலே வெள்ளிடை மலைபோல் விளக்குவன; உதாரணமாய்த் **தாயுமானவர்** "அரும்பொனே;" **இராமலிங்க சுவாமிகள்** "மாயையெனும்" செய்யுட்களைப் பார்க்க.

தாயுமான சுவாமிகள் பாடல்

"அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
  அறிவேஎன் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
  ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
  மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி எனஎனிரு கண்மாரி பெய்யவே
  வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வ னுனுலும் உனை
  இடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்றுநான் உன்னடிமை யல்லவோ
  யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
  தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
  சோதியே சுகவாரியே." (சுகவாரி-செ. எ)

என்றும்,

இராமலிங்கசுவாமிகள்

"மாயையெனு மிரவிலென் மனையகத் தேவிடய
  வாதனையெ னுங்கள் வர்தாம்
வந்துமன வடிமையை யெழுப்பியவ னைத்தமது
  வசமாக வுளவு கண்டு

மேயமதி யெனுமொரு விளக்கினைய வித்தெனது
மெய்ந்நிலைச் சாளிகை யெல்லாம்
வேறுற வுடைத்துள்ள பொருளெலாங் கொள்ளைகொள
மிகநடுக் குற்று நினையே
நேயமுற வோவாது கூவுகின் றேன்சற்றும்
நின்செவிக் கேற விலையோ
நீதியிலை யோதரும நெறியுமிலை யோவருளி
னிறைவுமிலை யோவென் செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழு மணியே
அகிலாண்ட முஞ்சரா சரமுமீன் றருள்பரசி
வானந்த வல்லி யுமையே.''

என்றும், இசையும் சேர்த்துப் பாடினால் அவற்றின் நயநலங்களின் செழிப்பு எவ்வண்ணம் என்று வர்ணித்துக் கூறல் என்னாலும் ஆகாது, மற்றெவராலும் ஆகாது.

தற்காலத் தமிழ் இசைப்பாவலர்

தமிழ்மொழியில் உயர்தரச் சங்கீத சாகித்தியங்களின் குறைபாட்டை நீக்குவதற்குத் தற்கால இசைப் பாவலர் முயன்று வருகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ பாபநாச சிவன், ஸ்ரீ கோடீஸ்வர ஐயர் முதலியோரின் சாகித்தியங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

யானும் தமிழ்ச் சங்கீத சாகித்தியத் துறையில் வெகு நாளாக உழைத்தவனாதலால் அத்துறையில் தமிழின் ஆற்றலைக் காட்டுவதற்காக யான் இயற்றிய கீர்த்தனங்களில் இரண்டை இவ்விடம் குறிப்பிட்டுப் பாடிக் காட்டுகின்றேன். அவற்றின் தகுதியைக் கேட்கும் கனவான்கள் தாமே தீர்மானித்துக் கொள்க.

1. இராகம்—கானடா—ஆதிதாளம்

பல்லவி

சிறப்பதிகாரம்—பிறர்க்குபகாரம்.

அநுபல்லவி

அறப்படையாளம் இதென்றறியாது தன்னை
மறப்பதும் செருக்கிற் பறப்பதும் ஈனம்—சிறப்பதி

சரணம்

யாவரும் இன்புறவே உயர்நோக்கம்,
எவரும் இழிவுற, இல்லையோர் ஆக்கம்,
கேவலம் ஒருயிர் என்றெறுக்காதே,
கேள்வியண்டாகும் தெய்வம் பொறுக்காதே—சிறப்பதி

2. இராகம்—கேதாரகௌளம் -- சாப்புத்தாளம்.

பல்லவி

செல்வத்திலே செல்வம் ஜீவகாருண்யம்
தெய்வத் தன்மை இதுவே.

அநுபல்லவி

கல்வியிற் கல்வி நற்காமங்களின் வித்து
நல்வினைப்பேறே அண்டநாத முடியில் முத்து—செல்வத்திலே.

சரணம்

நல்லறம் காணினும் மிக்க நல்லதிது
நாடும் பதவியெலாம் நல்ல வல்லதிது
இல்லற வாழ்க்கையிலும் இன்பந் தருவதிது
இங்கும் எங்கும் இன்றும் என்றும் வருவதிது—செல்வத்திலே.

ஆகவே தமிழில் சாகித்தியம் இயற்றுவது முடியுமோ என்ற கேள்விக்கு முடியுமென்ற விடை பகரலாம்.

கலிபோர்னியாவிற் பழவகைத் தொழில் மிகவும் பெருவாரியாகக் கையாளப்பட்டு வருகின்றது. ஆங்குள்ள அறிவியலறிஞர்கள் பழங்களை ஆராய்வதற்குப் புதுவகையான புதிர்க்கதிர்ப்பொறி (X-Ray Machine) யொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். அதன் உதவிகொண்டு பழங்கள் நல்ல பழங்களா அன்றிக் கல்லங்காய்ப்பட்டனவா என்று எளிதில் அறிந்துகொள்ளலாம். அப்பொறிவழி நோக்குங்கால் நல்ல பழங்களி னுட்பகுதி கருமையாகத் தெரிந்தால் அப்பழங்கள் நன்றாகக் கனிந்து பழுத்தவையாம்; அக்கறுப் பினூடே வெள்ளைநிறப் புள்ளிகளுடையவாகக் காணப்பட்டால் அவை பனியினால் கல்லங்காய்ப்பட்டுக் கெட்டுப் போனவையாம்.



[காழிக் கண்ணன்]

௯. "மஞ்சி விரட்டு"

எவ்வளவு தொலை நடந்தேனென்று எனக்குத் தெரியாது. அன்றைப் பகலும் இரவும் ஓயாமல் நடந்தேன். குறைந்தது நாற்பது ஐம்பது கல்லாவது நடந்திருக்க வேண்டும். பசியோ கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது. இனி ஓர் அடிகூட மேலே எடுத்துவைக்க முடியாதுபோலத் தோற்றிற்று. நல்ல வேளையாய் அப்பொழுது நான் இருந்த இடம் முட்செடிகளும் மரங்களும் நிறைந்த சிறு காடாக இருந்தது. "சரி, இங்குச் சிறிது காலந் தங்கிச் செல்லலாம்" என்று முடிவு செய்து அங்கேயே தங்கினேன்.

ஆனால் சில நாட்களில் கோடை தொடங்கி விட்டது. அதிலும் அவ்வாண்டு, தொடங்கும்போதே வெயில் கடுமையாகக் காய்ந்தது. புற்களெல்லாம் தீய்ந்து கருகி விட்டன. வாய்க்கால் குளங்களெல்லாம் வறண்டு விட்டன. ஒரு நாள் முழுதுந் திரிந்தாலும் ஒரு வேளைக்கு வேண்டிய புல்லையும் நீரையுங் கண்டுபிடிப்பதே இழுப்பாகி விட்டது. இனி இங்கிருத்தல் முடியாத காரியம் என்று கண்டு கொண்டேன். அருகிலிருந்த சிற்றூர் ஒன்றை நோக்கி நடந்தேன்.

சிறிது தொலை நான் செல்வதற்குள் அச்சிற்றூர்க்குச் செல்லுஞ் சாலையிற் பலர் காளைகளை அலங்கரித்துக் கையிற் பிடித்துச் செல்வதைக் கண்டேன். காளை ஒவ்வொன்றின் கழுத்திலும் சாயம் ஊட்டப்பெற்ற கத்தாழை நார்க்கயிறு

கள்! காளைகளோ நன்றாகக் கொழுத்து மழமழவென்றிருந் தன! "தின்னப் புல்லும் குடிக்க நீரும் இல்லாமல் நான் அல்லற்பட்டுக் கிடந்த இக் கோடைகாலத்தில் இவற்றிற்கு நல்ல தீனி கிடைத்திருக்கின்றது! என்ன இக் காளைகளுக்கு வந்த வாழ்வோ தெரியவில்லையே!" என்று சிறிது பொறாமை யுடன் எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.

அதற்குள், ஊரும் நெருங்கி விட்டது. ஊரெங்கும் மா விலைகளும் தோரணங்களும்! தெருக்களிலெல்லாம் நீர் தெளித் துக் கோலங்கள் போடப்பட்டிருந்தன!! ஊர் மக்கள் கும்பல் கும்பலாக ஆங்காங்கு நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். என்றுமில்லாத சிறப்புடன் அச்சிற்றூர் அன்று விளங்கிற்று என்றே சொல்ல வேண்டும். எனக்குக் காரணம் விளங்க வில்லை. ஆகவே காளைகளைப் பிடித்துக் கொண்டு ஊருக்குள் நுழைந்த இளைஞர்கள் சிலரைத் தொடர்ந்து அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று செவி கொடுத்துக் கேட்டுக் கொண்டே சென்றேன்.

நான் தொடர்ந்து வருவதைக் கண்ட ஒருவன், "இந்தக் காளையைப் பார்த்தாயாடா! என்ன அழகு! அலங்காரம் கண்கொண்டு பார்க்க முடியவில்லையே!" என்று ஏளனமாகக் கூறினான்.

"ஆமடா! நல்ல தீனிவைத்துத் தேற்றி மஞ்சி விரட் டுக்கு அனுப்பியிருக்கிற காளை மாதிரி தானடா இருக்கிறது!" என்று ஒத்துப் பாடினான் மற்றொருவன்.

"மஞ்சி விரட்டிற்கு வருகிற காளையெல்லாம் நன்றாக அலங்காரம் செய்து கொண்டு வரவேண்டும் என்று சட்டமா டா? இந்தக் காளையும் மஞ்சிவிரட்டுத் தொழுவிலே போய் நின்றால் நாம் தடுக்க முடியுமாடா?"

"ஓ! நன்றாக இதுவும் சேர்ந்து கொள்ளட்டும். நமக் கென்ன போயிற்று! வயிறு காய்ந்து ஒட்டிக்கிடக்கிற இது தொழுவை விட்டுப் புறப்பட்டவுடனேயே ஒரே அமுக்காய் அமுக்கிவிடுவார்கள் நம் பையன்கள்!"

இப்பொழுது எனக்குச் செய்தி ஒருவாறு புலப்பட்டது. அவ்வூரில் மாரியம்மன் கோவில் ஒன்றுண்டு. அதற்கு அன்று திருவிழா நாள்; மாலையில் "சல்லிக் கட்டு" என்று சொல்லும் 'மஞ்சிவிரட்டு' நடைபெறப் போகிறது என்று கண்டு கொண் டேன்.

அச் சமயம் ஐயரொருவர் அங்கே வந்து சேர்ந்தார். "முத்து! தொழு எங்கேடா?" என்று அவர் அவ்விளைஞர்களில் ஒருவனைப் பார்த்துக் கேட்டார். .

"அடே! கணக்குப்பிள்ளை குப்புச்சாமி ஐயரடா! சாமி! வாங்க, வாங்க! நீங்களும் மஞ்சிவிரட்டு பார்க்க வந்திருக்கிறீர்களா! நல்லது. தொழு எப்பொழுதும்போலே மாரியம்மன் திடலிலேதான். நீங்கள் ஏதாவது காளைமாடு பிடித்து வந்திருக்கிறீர்களா!" என்று முத்து விளையாட்டாக மொழிந்தான்.

"நான் எங்கே போவேன் காளைக்கு? காளை வாங்கவோ வளர்க்கவோ என்னிடம் பணம் ஏது? அதிருக்கட்டும், பந்தயம் ஏதாவது உண்டா?" என்று கேட்டார் ஐயர்.

முத்து:—"பந்தயம் ரூ. 50; அதோடு ஒரு வெள்ளிக் கெடியாரங்கூட."

ஐயர்:—"என்ன! வெள்ளிக் கடியாரமா! ஒரு கடியாரம் வாங்க வேண்டுமென்று எனக்கு எத்தனையோ நாளாக ஆசைதான். இருந்தாலும் நான் எங்கே போவேன் பணத்திற்கு! நீங்கள் சொல்வதுபோல் காளை யொன்று கிடைத்தாலும் பந்தயம் விட்டுப் பார்ப்பேன்."

முத்து:—"இதோ எங்கள் பின்னாலேயே ஒரு காளை வந்துகொண்டே இருக்கிறது. யாரும் அதற்குச் சொந்தக்காரர் இருப்பதாகத் தெரியவில்லை. அது உங்கள் மாடுதான் என்று சொல்லித் தொழுவிலே விட்டுப் பாருங்களேன்!"

ஐயர்:—"எனக்கு இஷ்டந்தான். இந்தக் காளை தோற்றுவிட்டால் எனக்கு நஷ்டம் ஒன்றும் வரப்போகிறதில்லை. ஜயித்தாலோ கடிகாரம் கைக்கு வரும்."

இவ்வாறு சொல்லும்போது ஐயர் ஆவலாக என்னைத் திரும்பிப் பார்த்துக் கூறினார். வயது முதிர்ந்த அப் பார்ப்பனருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் உதித்தது. அன்றியும் பந்தயத்திற் சேர்ந்து நம்முடைய திறமையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பலநாள் நான் கருதியிருந்ததுமுண்டு. இதற்குள் மாரியம்மன் திடல் வந்துவிட்டது. நான் நேரே மாட்டுத் தொழுவிற்குள் சென்று மற்றக் காளைகளுடன் நின்று கொண்டேன். "அடே, இது யார் மாடுடா! கழுத்திலே மாவிலையைக்கூடக்காணோம்!" என்றான் உள்ளிருந்த தலையாரி.

"இராமா! அது என் மாடென்று வைத்துக்கொள். நான்தான் அதன் சொந்தக்காரன். அதைப் பந்தயத்திற் சேர்க்கத்தான் ஓட்டி வந்திருக்கிறேன்" என்று குப்புசாமி ஐயர் முன்வந்து தலையாரியிடங் கூறினார்.

"அப்படிண்ணா அதுங் கழித்திலே எதாச்சும் ரூவா கேவா கட்டணுஞ்சாமி" என்றான் தலையாரி.

"சரி, இதோ என்னிடம் அஞ்சு ரூபாய் இருக்கிறது. இதைக் கட்டிவிடு. இந்தக் கால் ரூபாயை நீ எடுத்துக்கொள்!" என்று சொல்லி ஐயர் ஐந்தேகால் ரூபா எடுத்துக் கொடுத்தார். தலையாரி அதை வாங்கி, மஞ்சள் துணி யொன்றில் ரூபா ஐந்தை முடிந்து என் கழுத்திற் கட்டினான். கீழே அறுந்துகிடந்த இரண்டு மூன்று பூமாலைத் துண்டுகளைப் பொறுக்கி ஒன்றாக முடிந்து என் கழுத்திற் போட்டான். உடனே எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாயது. இரண்டு மூன்று முறை துள்ளி முக்காரம் போட்டேன்.

"போடா, முத்து! ஏனடா அந்த ஐயருக்கு அந்தக் காளையைப் பற்றிச் சொல்லி அதைச் சேர்த்துக் கொள்ளச் சொன்னாய்? அது பந்தயத்தைக் கெலித்துவிடப் போகிறது!" என்று முத்துவுடன் வந்த வீரப்பன் கூறினான்.

"நீ ஒரு பைத்தியம்! அந்தக் காளை எங்கேயிருந்தடா கெலிக்கப்போகிறது! இனிகண்டு ஆறுமாதம் இருக்கும் போலிருக்கிறது. அதுவாவது கெலிக்கவாவதுடா!" என்று கூறினான் முத்து.

"உனக்கு மாட்டு இராசி என்னடா தெரியும்? அது இப்பொழுது துள்ளினதையும் நிற்கிற சாயலையும் பார்த்தால் அது தானடா கெலிக்கப் போகிறது. நீ வேண்டுமானால் பார்!" என்றான் வீரப்பன்.

வீரப்பன் அறிவாளி என்று கண்டு கொண்டேன். அவன் கூறிய சொற்கள் எனக்கு ஊக்கத்தை யளித்தன.

இதற்குள் நாட்டாண்மைக்காரர் வந்துசேர்ந்தார். பறைகள் முழங்கின; கொம்புகள் ஊதின. "இந்த மயிலைக் காளை யாருடையது?" என்று நாட்டாண்மைக்காரர் தலையாரியைக் கேட்டார். "அது கணக்கப்பிள்ளை ஐயாவுதுங்க. அதுங் கயித்திலே ரூவா அஞ்சு கட்டியிருக்காங்க அவுங்க" என்றான் தலையாரி. "சரி, திறந்து விடுங்கள் தொழுவை!" என்று கட்டளை பிறப்பித்தார் தலைவர்.

காளைகள் துள்ளிக் குதித்துக்கொண்டு புறப்பட்டன. வெளியிலோ மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. தொழுவிலிருந்து வெளியே வந்த காளைகளின்மேற் பாய்ந்து இளைஞர்கள் பலர் அவற்றைப் பிடிக்க முயன்றனர். இரண்டொன்று பிடிபட்டன. சில இடறி விழுந்தன. மற்றவை மிரண்டு அங்குமிங்கும் ஓடின. எல்லாக் காளைகளும் புறப்பட்ட பிறகே நான் புறப்பட்டேன். புறப்படுவதற்கு முன் நன்ருக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டேன். அம்பு பாய்வதுபோல் தொழுவை விட்டு வெளியே பாய்ந்தேன். கால் நிலத்திற் பட்டதும் படாததுமாய்த் துள்ளித் துள்ளிப் பாய்ந்தோடினேன். என்னருகில் வருவதற்கே இளைஞர்கள் அஞ்சினர். இரண்டொருவர் முன்வந்தவர்களை ஒரே தாண்டாகத் தாண்டிக் கடந்து சென்றேன். எல்லாக் காளைகளுக்கு முன்னுக நான் ஓடினேன். ஆகவே என்னைப் பிடிப்பாரோ கட்ட முயல்வாரோ யாருமில்லை. மாரியம்மன் திடலையும் அதிலிருந்த மக்களையும் ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு நாட்டாண்மைக்காரர் இருந்தவிடம் வந்து நின்றேன்.

"காளை யென்ருல் இது காளை!" என்று நாட்டாண்மைக்காரர் என்னைத் தட்டிக் கொடுத்தார். கும்பல் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டது. "குப்புசாமி ஐயர்வாள்!" என்று கூப்பிட்டார் தலைவர். ஐயரும் அடக்க முடியாத களிப்புடன் வந்து நின்ருர். ஐம்பது ரூபா கொண்ட முடிப்பையும் வெள்ளிக் கடிகாரத்தையும் ஐயருக்குக் கொடுக்க வெளியிலெடுத்தார் தலைவர். இதற்குள் முத்து முன்வந்து, "இந்தக் காளை ஐயருடையதில்லை. அது எங்கிருந்தோ எங்கள் பின்னேடேயே மத்தியானம் தான் இங்குவந்து சேர்ந்தது. ஆகையால் ஐயருக்குப் பணமும் பரிசும் சேரக்கூடாது" என்று தடை கூறினுன்.

"ஐயர் பணம் முடிந்ததாகத் தலையாரி கூறினுனே அப்பொழுது ஏன் நீ தடுத்துக் கூறவில்லை?" என்று தலைவர் சினந்து கேட்டார்.

"நான் எங்கே இந்தக் காளை கெலிக்கப் போகிறது என்று சும்மா இருந்துவிட்டேன். இப்பொழுதுகூட ஐயர் 'இந்தக் காளை என் காளை தான்' என்று மாரியம்மன் கோவிலின்முன் கற்பூரத்தைக் கொளுத்தி அணைப்பாராஞல் எனக்குத் தடையில்லை" என்று குறும்பாக மொழிந்தான் முத்து. இதைக் கேட்ட தலைவர் சற்று மயங்கினுர். 'இனித் தாமதித்தால் காரியங் கெட்டுவிடும்' என்று கண்டுகொண்ட நான்

அவர் கையிலிருந்த பையையும் கடியாரத்தையும் வெடுக்கென்று என் வாயினுற் கவ்விப் பிடுங்கி ஐயரிடம் கொடுத்தேன்.

கூடியிருந்த மக்களனைவரும் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். "சரி, அந்தக் காளேயே உன் வழக்கைத் தீர்த்துவிட்டது. அதற்கிருக்கிற அறிவுகூட நம்மிற் சிலருக்கு இல்லே" என்று தலேவர் குத்தலாக மொழிந்தார். முத்து தலேயிறங்கினவனுய்க் கூட்டத்தில் மறைந்தான். கூட்டமுங் கலேயத் தொடங்கிற்று. கூட்டத்துடன் கலந்து பரிசு பெற்ற குப்புசாமி ஐயரும் மறைந்து விட்டார். மாரியம்மன் திடலில் கடைசியில் நான் மட்டும் தனியாக நின்று கொண்டிருக்கக் கண்டேன்; "சீ இவ்வளவுதானு ஐயரின் நன்றியறிதல்!" என்று நினேத்து வெறுப்புக் கொண்டேன்.

வேண்டுமென்றால் வெண்ணெயையும் நூற்கலாம்

அபிசீனியாப் போர்க்காரணமாக இத்தாலிய மக்களுக்கு வெளி நாடுகளிலிருந்து கம்பளி மயிர் கிடைப்பதரிதாயிற்று. அதனுல் அந்நாட்டு அறிவியலறிஞர்கள் மூன்ருண்டுகள் அரிதிலாராய்ந்து செயற்கைக் கம்பளி நெய்யும் முறையைக் கண்டுபிடித்தனர். மிலான் நகரில் அத்தகைய கம்பளி நெய்யும் பெரிய தொழிற்சாலே யொன்று கட்டப்படுகின்றது. பசுவின் பாலேக் காய்ச்சிக்கொண்டு அதன் ஆடையை நீக்கியபின் ஒரு கொதிகலத்தின் வழியாக அதனேச் செலுத்துகின்றனர். பசுவின் பாலிற் கேஸீன் என்ற கரிமப்பொருள் இருக்கிறது. பாலே இவ்வாறு கொதி கலத்ூடு செலுத்துவதால் கேஸீனேப் பிரித்தெடுக்கிருர்கள். பிரித்துச் சேர்த்த கேஸீனிலுள்ள நீரைப்போக்கி அதனேக் கட்டியாக்கி மீண்டும் அதனே மருந்துப் பொருள்களோடு சேர்த்துக் கரைக்கிருர்கள். இக்கரைதலை 600 நுண்டுளேகள் உள்ள பிளாட்டினம் சல்லடை ஒன்றின் வழியாக ஊற்றவே அது சிறுசிறு கம்பிகளாக வெளிவருகின்றது. அவற்றை அறிவியன்முறைப்படி நீரில் நனேப்பதால் அவை இறுகிக் கம்பளி நூலாகின்றன.

இத்தகைய செயற்கைக் கம்பளி சுருங்குவதில்லே; நீரில் எளிதில் நனேவதில்லே; ஆட்டு மயிர்க் கம்பளியைவிட இது மிகவும் நயமாகவும் விலே குறைவாகவும் இருக்கிறது.

இவ்வரிய புதுப்புனேவைப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கண்டு அதனே "வேண்டுமானுல் வெண்ணெயையும் நூற்கலாம்" என்ற பழமொழியாக்கி உரைத்த தமிழ்மக்களின் அறிவியலாற்றலே என்னென்றுரைப்பது !!!

சோகரஸம்

[ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]

சோகரஸம் என்பது தமிழில் அழுகை அல்லது அவலச் சுவைஎன்று சொல்லப்படும். சுவைகளைப்பற்றிப் பொதுவாகத் தெரிவிக்க வேண்டிய சில செய்திகளை முன்பு வீர ரஸத்தைப் பற்றிப் பேசியபொழுது கூறியுள்ளேன். எண்வகைச் சுவை களில் அழுகைச் சுவையானது இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கும்பற்றிப் பிறக்குமெனத் தொல்காப்பிய னார் கூறியுள்ளார். இளிவு, என்பது பிறரால் இகழப்படும் சிறுமை. இழவு என்பது நெருங்கிய சுற்றத்தார் முதலா னோரையும் இன்ப நுகர்ச்சிக்கு ஏதுவானவற்றையும் இழத் தல். அசைவு என்பது முதுமை முதலியவற்றால் தளர்ச்சியுற்று வருந்துதல். வறுமை என்பது பொருளின்மையால் போகம் துய்க்கப் பெறாத நிலைமை. எனவே, பெருமை, பொருள், இளமை, யாக்கை என்பவற்றின் கேட்டினால் உண்டாவது அழுகை என்பது பெறப்படும்.

உலகிலே தோற்றமுடையன யாவும் நிலையில்லாதன என் பது என்றும் மாறாத ஓர் வாய்மையாகும்.

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா"

என்று கூறின், அன்றென மறுப்பார் யாவருளர்? காணப் படும் யாவும் நிலையற்றன என்று அறிந்தும் மக்கள் அவற்றின் மேல் பற்று வைப்பதற்குக் காரணம் பாச சம்பந்தமே யாகும். ஒன்றின்மீது பற்று வைத்தவர் அதனைப் பிரியவோ இழக் கவோ நேர்ந்தபொழுது அதனால் துன்புறுவதும் இயல்பே. உலக முழுதும் நாம் கண்கூடாகக் காணும் காட்சி இதுவே.

ஆசிரியர் தொல்காப்பியனார் காஞ்சி என்னும் புறத்திணை யால் அறிவிப்பது இந்நிலையாமையே. அத்திணையில் வரும்,

"காதலி யிழந்த தபுதார நிலையும்,
காதலன் இழந்த தாபத நிலையும்"

முதலாய துறைகளெல்லாம் நிலையாமையையும், அதனால் எய்தும் இன்னலையும் பலபடியாக எடுத்துக்காட்டுகின்றன. அவ்விலக்கணத்திற்கு உதாரணமாகும் எத்தனையோ பல வரலாறுகள் இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

குடக்கோ நெடுஞ்சேரலாதன் என்ற சேரமன்னனும் பெருவிறற்கிள்ளி என்ற சோழமன்னனும் எதிர்ந்து புரிந்த

போரில் இருவரும் இறந்தனராக, அதனைக்கண்ணுற்ற **பரணர்** என்னும் புலவர்பெருமான், " மிகப்பலவாக வந்த யானைக ளெல்லாம் படைக்கலங்களால் இறந்துபட்டன. வெற்றி மிக்க குதிரையெல்லாம் வீரர்களோடு மாண்டு ஒழிந்தன. தேரேறி வந்த வீரரெல்லாம் ஒருங்கு மாய்ந்தார்கள். வீரமுரசெல்லாம் தாங்குவாரின்றிக் கிடந்து அழிந்தன. சாந்து பூசிய தம் முடைய மார்பிலே நெடிய வேல் பாய்ந்தமையால் அரச ரிருவரும் மடிந்தனர். ஐயோ, அவர்களுடைய வளம் பொருந் திய நாடுகள் இனி என்ன துன்பமுறுநிற்குமோ !" என்று இரங்கிப் பாடிய புறப்பாட்டு அவலத்திற்கு ஓர் எடுத்துக்காட் டாக வுள்ளது.

" எனைப்பல் யானையும் அம்பொடு துளங்கி
விளைக்கும் வினையின்றிப் படையொழிந் தனவே;
விறற்புகழ் மாண்ட புரவி யெல்லாம்
மறத்தகை மைந்தரொடு ஆண்டுப்பட் டனவே;
தேர்தர வந்த சான்றோ ரெல்லாம்
தோல்கண் மறைப்ப ஒருங்குமாய்ந் தனரே;
விசித்து வினைமாண்ட மயிர்க்கண் முரசம்
பொறுக்குநர் இன்மையின் இருந்துவிளிந் தனவே;
சாந்தமை மார்பின் நெடுவேல் பாய்ந்தென
வேந்தரும் பொருதுகளத் தொழிந்தனர்; இனியே
என்னாவதுகொல் தானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனற் பாயும்
யாணர் அறாஅ வைப்பிற்
காமர் கிடக்கைஅவர் அகன்றலை நாடே."

காட்டிலே ஒரு முல்லைக்கொடி படர்தற்குத் தான் ஏறிவந்த தேரை நல்கித் தன் இணையடி சிவக்க நடந்து சென்றவனும், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப் பாரிலை" என்று சைவசமய குரவராகிய **சுந்தரமூர்த்தி சுவாமி** களால் வள்ளன்மைக்கே எல்லையாக வைத்துப்பாராட்டப் பெற்றவனும் ஆகிய **வேள் பாரி**யானவன் மூவேந்தரும் புரிந்த வஞ்சப் போரிலே துஞ்சுதலுற்றான். அவனுக்கு ஆருயிர்த் தோழராயிருந்த **கபிலர்** என்னும் நல்லிசைப் புலவர் அவன் இறந்ததற்கு மிக வருந்திப் பலவாறு புலம்பினராய், பாரியின் மகளிர் இருவரையும் தக்கோர்க்கு வாழ்க்கைப்படுத்தித் தமது நட்புக்கடன் கழிக்க எண்ணி, அன்னாரை உடன் அழைத்துச் சென்றனர். சென்றவர் ஒருநாள் ஓரிடத்தில் தங்கியபொழுது மாலைப்பொழுது வர நிறைமதி உதயமாயிற்று. அதனைக் கண்டபொழுது அதற்குமுந்திய நிறைமதியில் தாம் இருந்த

நிலைமையும், அன்று எய்திய நிலைமையும், பாரிமகளிர் உள்ளத்துட்புகுந்து வாட்டின. அப்பொழுது அவர்கள் கூறிய,

“ அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்,
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றுங் கொண்டார்...யாம் எந்தையும் இலமே,”

என்னும் அருமைச்செய்யுள் நம் நெஞ்சினை உருக்குகின்றது.

அதிகமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளல் தான் ஒரு மலையுச்சியிலே அருமையாகப் பெற்ற அமிழ்தமயமான நெல்லிக்கனியை நல்லிசைப் புலமை வாய்ந்த ஔவையார் உண்டு நெடுநாள் உயிர்வாழவேண்டுமெனக் கருதி அவருக்களித்தவன்; பலகாலும் அருமை பாராட்டி அவரைப் பேணியவன். அவன் மாற்றானுடைய வேல்பாய்ந்துஉயிர்துறந்தபோது, ஔவையார் மனம் நைந்து அவன் பண்புகள் பலவற்றையும் சொல்லிச் சொல்லி அரற்றுகின்றவர், “அவன் மார்பில் தைத்த வேல் பாணருடைய உண்கலத்தைத் துளைத்து, இரப்போர் கையிலும் தைத்துருவி, அழகிய சொல்லையும் நுண்ணிய ஆராய்ச்சியையுமுடைய புலவர் நாவிலே போய் வீழ்ந்தது. எமக்குப் பற்றுக்கோடாகிய எம் இறைவன் எவ்விடத்துள்ளான்கொல்லோ! இனிப் பாடுவாரும் இல்லை; பாடுவார்க்கு ஒன்று ஈவாருமில்லை. பகன்றையின் பெரியமலர் பிறராற் சூடப்படாது கழிந்தாற் போலப் பிறர்க்கு ஒன்று ஈயாது கழியும் உயிர்கள் மிகப்பல உள்ளனவே!” என்று கூறி இரங்குவாராயினர்.

இன்னும், வறுமைத் துன்பின் செறிவை உரைப்பனவும், தம்மைப் புரந்தோர் தாமாய்ந்திடவே புலவர்கள் புலம்பி அலமரலை அறிவிப்பனவும், கணவனையிழந்த தணவாக்காதலி தீப்பாய் செய்தி தெரிவிப்பனவும், கைம்மைநோன்பின் வெம்மைவிரிப்பனவும் ஆகிக் கற்போர் உள்ளத்தைக் கலங்கச் செய்யும் எத்தனையோ பாட்டுக்கள் புறநானூற்றில் உள்ளன.

தன் பெற்றோர் அளித்த பெரும்பொருட்குவியலை இழந்த கோவலன் கண்ணகியின் காற்சிலம்பை வாணிக முதலாகக் கொண்டு பொருளீட்டக்கருதி அந்நங்கையுடன் மதுரையையடைந்து ஆயர்சேரியில் இருந்தபொழுதும், மாபெரும்பத்தினியாகிய கண்ணகி திருமுகம் வியர்க்கவும் செங்கண் சேப்பவும் தன் கையால் அட்ட அறுசுவையுண்டியைக் கோவலற்களித்து

வெற்றிலைச் சுருளும் பாக்கும் விருப்புடன் நல்கிநின்றாள். அப்பொழுது கோவலன் அவளை அருகே அழைத்து, அணைத்து "நின்மெல்லிய அடிகள் கல்லதர்க்கானம் கடத்தற்கும் வல்லவாயினவோ? இதுமாயம் கொல்லோ? வல்வினைகொல்லோ? யான் உளங்கலங்கி யாவதும் அறியேன்.

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி,
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்து ஈங்கு என்றுயர் களைந்த
பொன்னே, கொடியே; புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி"

யான் நினது சீறடிச் சிலம்பின் ஒன்றினைக் கொண்டுபோய் மாறி வருவேன், மயங்காதிருப்பாய்" என்று கூறி அவள் தனித்திருக்கப் பிரியலாற்றாது உள்ளம் வெதும்பித் தன் கண்ணீரை மறைத்துச் செல்லா நிற்பதும், சென்றவன் அன்றே கொலையுண்ட தீச்செய்தியைக்கேட்ட கண்ணகி,

பொங்கி யெழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலொடும் சேணிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன் கேள்வனை
எங்கணா, என்னா இனைந்தேங்கி மாழ்குவாள்

ஆகி, அரற்றி, 'காவியுகு நீரும் கையிற்றனிச் சிலம்பும் ஆவிகுடிபோன அவ்வடிவமாய் அரசவையெய்தி வழக்குரைத்து, கீழ்த்திசைவாயிற் கணவனொடு புகுந்தேன், மேற்றிசை வாயில் வறியேன் பெயர்வேன்" என்று கூறி இரவும் பகலும் மயங்கிக் கையற்று வையைக் கரைவழியே ஏகாநிற்பதும், ஆகிய செய்திகள் எவ்வளவு வெவ்விய துயர்விளைக்கின்றன.

சீவக சிந்தாமணி என்ற செந்தமிழ்க் காப்பியத்திலே, சச்சந்த மன்னன் கட்டியங்காரன் என்னும் தீயமைச்சன்பால் அரசினை ஒப்புவித்து அவனாற் கொலையுண்டு இறந்தானாக, அவன் தேவியாகிய விசயை, மயிற்பொறி ஊர்ந்து நகரின் புறத்தேயுள்ள புறங்காட்டிலே நள்ளிருளில் புதல்வனை யீன்று, அப்பாலனை நோக்கி '.

'அரசே! நின்தந்தையானவர், சோதிடர்கள் பலருங் கூடிச் சாதகஞ்செய்ய, வேந்தர்கட்கெல்லாம் திருமுகம் விடுத்தும், "பன்னீராண்டு வரியை ஒழிமின், கோயில்களும், அறச்சாலைகளும் புதுக்குமின், பகைவர்களைச் சிறைவிடுத்துச் சிறைக்

கோட்டத்தைத் தூய்மையாக்குமின்! பண்டாரத்தைத் திறந்து விட்டு ஏழுநாள்காறும் வேண்டுவார் வேண்டுமாறு ஆடை அணிகலன்களும் செம்பொன்னும் கவர்ந்துகொள்ள விடுமின்! புலவர்களுக்குத் தேரும் யானையும் பட்டும் பொன்னும் வரை வின்றி வீசுமின்!" என்று கூறிக் கொண்டாடப் பிறக்கும் நீ, தீவினையேன் காண இவ்வாறு பிறப்பதோ?

'வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட் டுயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கியல் வேந்தே'

பற்றுமன்னன் நகர்ப்புறவால், பாயல் பிணஞ்சூழ் சுடுகாடால் உற்றாரில்லாத் தமியேனால் ஒதுங்கலாகாத் தூங்கிருளால் மற்றிஞ்ஞாலமுடையாய் நீ வளருமாறும் அறியேனால், எற்றே இதுகண்டு ஏகாதே இருந்தியால் என் இன்னுயிரே!" என்று அவலித்து அரற்றுவது கருங்கல் நெஞ்சையும் கலங்கச் செய் வன காண்மின்!

பாரதப்போரிலே அருச்சுனன் மைந்தனாகிய அபிமன் இறந்த செய்தியைக் கூறும் வில்லிபுத்தூரர் தாம் முன்பு நிகழ்ந்த தொரு வரலாற்றைப் பாடும் கவிஞர் என்பதை மறந்தவராகிப் புத்திரசோகம் மேலிட்ட தந்தையே போன்று,

மாயனும் திருமாமன் தனஞ்சயனும் திருத்தாதை
வானோர்க் கெல்லாம்
நாயனும் பிதாமகன் மற்றொருகோடி நராதிபராம்
நண்பாய் வந்தோர்
சேயனும் அபிமனுவாம் சயத்திரதன் கைப்படுவான்
செயற்கை வெவ்வேறு
ஆயநாள் அவனிதலத் தவ்விதியை வெல்லும்வகை
யார் வல்லாரே.

கன்னனையுந் தேரழித்தான் கந்தனிலும் வலியனே அந்தோ அந்தோ
மன்னவர் ஐவருமிக்க மைந்தனுயிர் அழிவதோ அந்தோ அந்தோ
பொன்னுலகோர் வியந்துருகிப் புத்தியினால் மலர் சொரிந்தார்
அந்தோ அந்தோ
அன்னநெடுங் துவசன்இவற் காயுமிகக் கொடுத்திலனே
அந்தோ அந்தோ.

என்று புலம்புவாராயினர். கவிக்கூற்றிலேயே இவ்வளவு சோகம் ததும்பக் கூறிய அவர் தருமன் வீமன் அருச்சுனன் முதலானவர்கள் எய்திய துயரத்தை எவ்வாறு கூறியிருப்பர்

என்பது யாவரும் அநுமித்தற்குரியதே. தருமன் அரற்றுதலைத் தெரிவிக்கும் செய்யுட்களில் ஒன்றைக் கவனிப்போம்.

பிறந்ததினம் முதலாகப் பெற்றெடுத்த விடலையினும் பீடும் தேசும்
சிறந்தனையென் றுனைக் கொண்டே தெவ்வரை வென்றுலகாளச்
சிந்தித்தேனே
மறந்தனையோ எங்களையும் மாலையினால் வளைப்புண்டு மருவார்போரில்
இறந்தனையோ என்கண்ணே என்னுயிரே, அபிமாஇன் றென்செய்
தாயே ?

இவ்வாறே ராமசரிதை, நளசரிதை, அரிச்சந்திர சரிதை முதலியவற்றைக் கூறும் காப்பியங்கள் பலவற்றிலும் சோகம் மிகுந்த பகுதிகள் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன. சோகம் என்பது அகத்தில் எழும் ஓர் துன்ப உணர்ச்சியேயாயினும் நல்லிசைப் புலவர்கள் அதனை மேலும் மேலும் விரும்பிநுகரும் சுவையாகச் செய்துவிடுகின்றனர். இங்ஙனம் அவலச்சுவையைக் கவிகள் மூலமாக அநுபவிக்கும் நாம் அதினின்றும் தெளியவேண்டிய சில உள்ளன. உலகில் இன்பதுன்பங்கள் மாறிமாறி நிகழ்ந்துகொண்டே யிருக்கும். யாதானும் ஒரு துன்பம் வந்துற்றபொழுது, 'ஐயகோ என்செய்வோம்!' என்று அதில் அமிழ்ந்துவிடாது, "இஃது உலகியற்கையே" எனவும், "எத்தனையோ பெரியோர்கள் எல்லையில்லாத் துன்பங்களை அடைந்திருக்கையில் யாம் எவ்வளவு?" எனவும் எண்ணித் தம்மைத் தேற்றிக்கொள்ளுதல் வேண்டும். ஏனையோர் துன்புறுதலைக் காணுமிடத்து அதனைத் தமக்கு வந்த துன்பம்போல் நினைந்து நினைந்து உருகுதல் வேண்டும். இவ்வகை உணர்ச்சியானது கருணாரஸம் எனப்படும். கருணை என்பது பெரிதும் வேண்டற்பாலதொன்றே. மற்றும், துன்பத்தின் காரணத்தை அறிந்து நீங்கி, நிலையான இன்பத்தைப் பெறுதற்கு முயலுதலும் வேண்டும்.

கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.]

தமிழ்—IV

தமிழை 'அரவ'மென்பதேன்? தக்காணத்திலுள்ள முகம்மதியர்களும், தெலுங்கர்களும், கன்னடர்களும் தமிழ் மொழியை 'அரவம்' என்றே அழைப்பர். அஃதேன்?

'டாக்டர் [1]குண்டெர்ட் என்பவர் அரவம் என்றசொல்லை அறவம் என்று கொண்டனா; கொண்டு, தமிழிலக்கியமே ஏனைய மொழி இலக்கியங்களைக் காட்டினும் அற நூல்களும் அறத்துறைகளும் நிறைந்ததாகக் காணப்படுகின்றதாதலின், அறம் மலிந்த அம்மொழி **அறவம்** என்று அழைக்கப்பட்டது போலும் என்று வகுத்துரைத்தார். இதன்படி அறவர் என்ற சொல் அறம்மலிந்த கொள்கையினரையே குறிக்கும். புத்தர் பெருமானுக்கு **அறவன்** என்ற பெயரொன்றுங் காணப்படுதல் ஈண்டுக் குறிப்பிடற்பாலது. அதனால் அரவம் என்பது புத்தர்களையே குறிப்பதாகாதோ என்ற ஐயம் நிகழ்தல் கூடும். இடையின ரகரங் கொண்டியலும் அரவம் என்ற சொல்லை வல்லின றகர முடையதாகக் கொண்டு இப்பொருள் கூறுதல் ஆகுமோ என்றும் கேட்கலாம். தமிழ் வல்லின றகரம் தெலுங்கிலும் கன்னடத்திலும் இடையின ரகரமாகத் திரிதல் இயல்பு. ஆதலின் அக் கேள்விக்கு விடை எளிது. தமிழ் அறம் என்ற சொல் கன்னடத்தில் **அரவு** என்றுதல் காண்க.

இனி, அரவம் என்ற சொல் அறிவு என்ற சொல்லடியாகப் பிறந்ததென்று கொள்வர் ஒரு சாரார். தென்னாட்டிலுள்ள மக்களினத்தாருள் தமிழ்மக்களே அறிவிற் சிறந்தவர்களாகப் பண்டுதொட்டு யாவரானுங் கொள்ளப்பட்டு வந்துள்ளமையின் இக் கருத்துத் தோன்றியது போலும்!

இனி, செந்தமிழ் சேர் ஏதமில் பன்னிரு கொடுந்தமிழ் நாடுகளுள் **அருவா** என்பதும் ஒன்று. அருவா என்ற அச் சொல்லின் திரிபே அரவம் என்று கொண்டார் மற்றொரு சாரார்.

இவையெல்லாம் அரவம் என்ற சொல் ஒரு மொழியையோ, அம் மொழி பேசும் மக்களினத்தாரையோ குறிக்க

1. Dr. Gundert.

எழுந்த தமிழ்ச் சொல்லாகக் கொண்டு இடர்ப்பட்டுக் கூறியனவேயாம். அப்பொருளில் **அரவம்** என்ற சொல் தமிழ்மொழியில் யாண்டும் வழங்கப்பட்டதில்லை. தெலுங்கர்களும், கன்னடர்களும், தக்காணிகளும் அவ்வாறு அழைக்கின்றனர் என்று மேற்கூறினமையால், அச் சொற்பொருள் தமிழொழிந்த ஏனைய மொழிகளிலேயே தேடக்கிடப்பதாம். தெலுங்கு மொழி வல்ல பண்டிதர்கள் பலர் **அரவம்** என்பது திராவிடமன்று, வடசொல்லே என்று யாப்புறுத்துக் கூறுகின்றனர். அ+ரவ என்பதே அரவம் ஆகி, ஒலியற்றது என்று பொருள் கொடுக்கும் என அவர் கூறுவர். ஹ என்பது போன்ற மூச்சொலிகள் இன்மையால் தமிழ் இப்பெயர் பெற்றது என்பது அவர்கள் கருத்துப் போலும். இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ்மொழியொன்றில் மட்டுமே இவ்வொலிகள் இல்லை. அதனால் அம் மொழி இழுக்குடைய தொன்றாகக் கருதப்பட்டது ஆனால் இத்தகைய ஒரு காரணத்தைக் கொண்டு பெறப்பட்ட ஒரு பெயரைத் தமிழ் மக்கள் தாமாகவே சூட்டிக் கொண்டிருப்பார்கள் என்று கருதுதல் அறிவுடைத்தாகாது.

ஓசையற்ற மொழி என்பதைக் குறிக்க அரவ-மு என்று மொழிக்குப் பெயர் சூட்டிய தெலுங்கர் அம்மொழி பேசுவோரை 'அரவா-ளு' என்று அழைத்ததும் இயல்பே. தெலுங்கில் அரவம் என்ற சொல் ஓசையற்றது என்று பொருள்பட்டது; தமிழிலும் அரவம் என்ற சொல் வழங்குகிறது; ஆனால், அச் சொல் ஒலி என்று பொருள்படுகிறது. இப்பொருள்படும் இச்சொல்லை, **ரவ** என்ற வடசொல் திசைச்சொல்லிலக்கண முறைப்படி அகர வொலியை முதலிலேற்று **அரவ** என்று தமிழிலும் வந்துள்ளது என்று கூறுதல் கூடாது. ஏன்? வடமொழி **ரவ** என்ற சொல் பேரொலியைக் குறிப்பது; தமிழிலுள்ள அரவம் என்ற சொல்லோ மெல்லிய ஓசையையே குறிக்குமாகலின்.

இனி, [1] சோழ மண்டலக் கரையிலுள்ள நெல்லூர்ப் பகுதியில் [2] **அர்வர்ணி** என்ற மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று [3] டாலமி என்ற கிரேக்க நிலநூலாசிரியர் வரைந்துள்ளமையும் ஈண்டுக் குறிக்கற்பாலது.

எனவே, தமிழை '**அரவம்**' என்றழைப்பதற்கு உண்மைக் காரணம் என்ன என்பது இன்னும் ஆராய்ச்சிக்கே இடனாக உள்ளது.

1. Coromandel Coast. 2. The Arvarni. 3. Ptolemy.

II. மலையாளம்

திராவிட மொழியினத்தில் தமிழுக்கு அடுத்தபடியாக இடம் பெறக்கூடியது மலையாளம் என்னும் மொழியாம். தமிழுக்கு மற்றெல்லா மொழிகளைக் காட்டிலும் நெருங்கிய தொடர்புடையது அம் மொழியே. மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அப்பாலுள்ள **மலபார்** என்னும் மலைவாரக் கடற்கரையை யடுத்துள்ள ஊர்களில் இம்மொழி பேசப்பட்டு வருகிறது. மங்களூர் என்ற ஊர் தொடங்கித் தெற்கே திருவனந்தபுரம் வரை இம் மொழி வழங்கிவருகிறது. மங்களூருக்கு வடக்கே கன்னடமுந் துளுவமும் வழங்குகின்றன. திருவனந்தபுரத்திற்குத் தெற்கிலும் தென்கிழக்கிலும் தமிழ்மொழி பெரிதுங் கலப்புறுகிறது. திருவாங்கூர், கொச்சி, மலையாளம், கன்னடக் கூற்றங்கள் ஆகிய இடங்கள் மலையாளமொழி வழங்கும் இடங்களாம். இம்மொழி பேசும் மக்கள் ஏறக்குறைய எழுபது நூறாயிரவராவர். மலபார் கடற்கரை வெளிநாட்டு மக்கள் பலர்க்கு இறங்குதுறையா யிருந்துவந் துள்ளது. ஃபினீஷியர், கிரேக்கர், யூதர், சிரியக் கிறித்தவர், பாரசீகக் கிறித்தவர், அராபியர்கள் ஆகியோர் வழிவழியாகப் பண்டு தொட்டு அந்தக் கரையோரங்களில் வாணிகம் நடாத்திவந் துள்ளனர். அவர்களுள் யூதரும் சிரியக் கிறித்தவரும் அராபியர்களும் பல இடங்களில் நிலையாகவே வந்து குடியேறி யுள்ளனர்.

மலையாளம் என்பது **மலையாழ்மா** என்றும், **மலையாய்மா** என்றும் கூறப்படும். இவை மூன்றும் ஒன்றேயாம். இவை மூன்றிலும் முதற்கண் நிற்கும் **மலை** என்ற பகுதி மலைத்தொடர் என்று பொருள்படும் வடசொல்லாகிய **மலய** என்பதன் திரிபன்று; தமிழ்ச்சொல்லாகிய மலை என்பதேயாம். தமிழ்ச் சொல்லாகிய மலை என்பதிலிருந்தே வடசொல்லாகிய **மலய** என்ற சொல் பெறப்பட்டுள்ளது என்று ஐயமின்றிக் கூறலாம். மலை என்ற பகுதி நீங்கிய "ஆளம்" என்ற சொல் 'பழகு, உடைத்தாயிரு, ஆணை செலுத்து' என்று பொருள்படும் **ஆள்** என்ற சொல்லடியாகப் பிறந்ததாகும். 'ஆழம்' என்று கொண்டு "ஆழ்" என்ற சொல்லடியாகப் பெறப்பட்டது என்று கொள்ளுதல் பொருந்தாது. தமிழ் "ஆண்மை" என்பது "ஆள்மை" என்பதன் திரிபாம். அந்த "ஆள்மை" என்பது மலையாளத்தில் "ஆள்மா" எனப்படும். அதுவே "ஆழ்மா" என்று திரிந்ததாகும். மலையாளத்தில் இந்த **ஆள்மா** என்பது **ஆய்மா** என்றுந் திரிபுறும். ஆகவே மலையா

ளம் அல்லது மலையாழ்மா என்பது மலைப்பகுதி என்றே பொருள்படும். வில்லாண்மை படைத்தோரை வில்லாளிகள் என்று அழைப்பார்கள். அதுபோன்றே மலைப்பகுதியில் வாழ்ந்து மலையாண்மை புரிந்து வந்தவர்கள் மலையாளிகள் என்றழைக்கப்பட்டனர்.

வடமொழி வாணர்கள் மலையாள மொழியைக் குறிப்பதற்குத் தனிப்பெயர் கொடுப்பதில்லை. மலையாளம் தமிழ் என்ற இரண்டையும் குறிப்பதற்கு அவர்கள் திராவிடம் என்ற சொல்லையே வழங்குவர். ஆனால் மலையாள நாட்டைக் குறிக்குங்கால் அவர்கள் வேறு தனிப் பெயர் கொடுத்தே குறிப்பர். கோகர்ணம்முதல் குமரிமுனை வரையிலுள்ள ஊர்களுக்கெல்லாம் அவர்கள் வடமொழிப் பெயர்கள் வகுத்துள்ளனர். மலையாள நாட்டுப் பகுதியை அவர்கள் **கேரளம்** என்று கூறுவர். கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரியதான அசோகர் கல்வெட்டில் "கேரளம் புத்திரா" என்று மலையாள நாட்டு மன்னனொருவன் குறிக்கப்படுகிறான். திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் கேரளம் என்ற சொல் பல திரிபுகளுடன் பயின்று வருகின்றது. தமிழில் கேரளம், சேரலம், சேரம் என்ற மூன்று சொற்கள் வழங்குகின்றன. தெலுங்கிலும் கன்னடத்திலும் கேரளம் என்ற சொல் வழங்குகின்றது. மலையாள மொழியில் கேரளம், சேரலம், சேரம் என்ற சொற்களுடன் சேரம் என்ற சொல்லும் வழங்குகின்றது. கேரளவாசி யொருவன் **கேலன்** என்றும், **கேளு** என்றும் அழைக்கப்படுவான். இந்நாட்டு மன்னனைப் [1]**பிளினி** என்பார் [2]**சேலபோத்ராஸ்** என்று குறிக்கின்றார். இது சேரல புத்திரர் என்பது போலும். [3]டாலிமியோ [4]**கேரபோத்ராஸ்** (கேர புத்திரர்கள்) என்று குறித்தார்.

பண்டைக்காலத்திற் **கேரள நாடு** இருபெரும்பிரிவினதாக இருந்தது போலும்! மேலைக் கடற்கரை யோரத்தை யடுத்திருந்த பகுதிகளெல்லாம் கேரளம் என்ற வடமொழிப் பெயராலேயே வழங்கிவந்திருத்தல் வேண்டும்; இடையிடையே தமிழ்ப் பெயராகிய சேரம் என்பதையும் அது வழங்கியிருத்தல் கூடும். இஃது ஒரு பிரிவு; மற்றொரு பிரிவு உள்நாட்டுப் பிரிவு. இப்போதைய கோயமுத்தூர், சேலம் ஆகிய இருகூற்றங்களும் மைசூர் நாட்டின் ஒரு பகுதியும் இப் பிரிவின் பாற்பட்டன. இப் பிரிவு கேரளம் என்ற வடமொழிப் பெயரையே கையாண்டதாகத் தெரியவில்லை. சேரம் என்றும், கொங்கு என்றுமே அது தன்னைக் குறித்துவந்துள்ளது.

1. Pliny. 2. Celobotras. 3. Ptolemy. 4. Kerobothras.

எனினும் கேரளம் என்பதற்கும் சேரம் என்பதற்கு மிடையே வேறுபாடொன்றுமில்லை. இரண்டும் ஒன்றே. சேரநாட்டெல்லை குறித்த தமிழ்ப் புலவரெல்லாம் கள்ளிக்கோட்டை என்ற கோழிக்கோட்டின் தென்பாலுள்ள மலையாளக் கரையை யடுத்துள்ள பகுதியெல்லாம் சேரநாடென்றே குறித்துள்ளனர். கேரம் என்ற சொல்லிலிருந்தே கேரளம் என்ற வடசொற் பிறந்திருத்தல் வேண்டும். **கொங்கு** என்பது குடகு என்பதைப் போன்று வளைந்தது கோணலானது என்றே பொருள்படும். மலையாள நாட்டு இயற்கை யமைப்பை யொட்டி இப்பெயர் உண்டாயிருத்தல் எளிதில் உய்த்துணரப் படும். **கேரம்** என்ற சொல்லுக்கு மலையாள மொழியில் “தென்னைமரம்” என்ற பொருளுளது. மலையாள நாட்டில் தென்னைகள் சிறப்பாக வளர்ந்து பெருகியிருக்கின்றமைபற்றி ஒருவாறு இம்மரத்தினாலேயே அந்நாட்டிற்கு அப்பெயர் வந்ததென்று கூற முன்வரலாம்; எனினும் மரத்தின் பெயரை யொட்டி நாட்டிற்குப் பெயர் வந்ததா அன்றி நாட்டின் பெயரை யொட்டி மரத்திற்குப் பெயரிடப்பட்டதா என்பது சிக்கலான ஒரு கேள்வியேயாகும்.

இனி, **மலையாளம்** என்ற சொல்லை யொட்டிய எச் சொல்லும் பண்டைக் கிரேக்க ஆசிரியர்களால் குறிக்கப் படவில்லை. கி. பி. 545-ஆம் ஆண்டிற் குரியது என்று கருதப்படுவதான [1] “கிறித்தவ ஊர்வரலாறு” என்ற கிரேக்க நூலில் ஈழநாட்டைக் குறித்து எழுதிவருமிடத்து அதனையடுத்துள்ள நாடுகளில் “மிளகுவரும் **மலே**” என்ற ஒரு நாடுங் குறிக்கப்பட்டுள்ளது. இச் சொல் மலையென்ற தமிழ்ச் சொல்லுடன் பொருத்தமாக இருப்பது எளிதிற் புலனாகும். மலை, மலைநாடு போன்ற சொற்கள் அக்காலை ஈழநாட்டிற் குடியேறியிருந்த தமிழர்களால் பெருவாரியாக வழங்கப்பட்டிருத்தல் கூடும். இன்றும் அங்கு அவை வழங்குவனவே. மலை என்ற அச் சொல் மலையாளத்தில் **மலே** என்றே வழங்குவதாம்.

---

1. Christian Topography of Cosmas Indicopleustes.

பண்டை இந்தியக் கலை

[வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.]

5

ஆரியர் செல்வாக்கின் பயன்

ஜாதிகள் இக்காலத்தில் இருத்தல் போல முன்னாளில் இருந்தில. பிரமசாரி என்பவன் ஒரு வேதத்தையும் அதன் சார்பான வேதாங்கங்களையும் கற்றல் வேண்டும். கிரகஸ்தன் என்பவன் விதிக்கப்பட்ட வேத வேள்விகளையும் ஸ்ரௌத விதிகளையும் செய்தல் வேண்டும். எனவே, இவ்விரு நிலைகட்கும் பிராமண ஆசிரியன்—பிராமண புரோகிதன் இவர்தம் உதவி வேண்டியதாயிற்று. இவரே பிராமண மதம் தழுவிய ஆரியர் ஆவர். ஆரியப் பார்ப்பனர் எப்போதும் தங்கள் மதத்திற்குப் பிறரை இழுப்பதில் ஊக்கங் காட்டி வந்தனர். இவ்வுண்மை ரிக் வேதத்திலிருந்து நன்கு வெளியாகிறது. பிராமண மதத்தைப் பரப்பப் பௌத்த சமண முனிவர்களைப் போல வேதகால ரிஷிகள் முனைந்திலர். ஆயினும் அவர்கள் கூட்டங் கூட்டமாக நெடுந்தூரத்து இடங்கட்குச் சிறப்பாகத் தென் இந்தியாவில் சென்று வந்தனர். விந்திய மலைக்குத் தெற்கே சித்ரகூடமலைக்கும் கிருஷ்ணாவின் கிளைநதியான பம்பாவுக்கும் இடைப்பட்ட இடத்தில், இராமன் தண்டகாரண்யத்துக்கு வருமுன், ரிஷிகள் பல இடங்களில் வேள்விகளைச் செய்தனர் என்பது தெரிகிறது. அவ்விடங்களில் (ஆரியர் அல்லார்) இராக்ஷதர் என்னும் கூட்டத்தார் இருந்தனர். அவர்கள் பிராமண மதத்திற்கு விரோதிகளாக இருந்தார்கள். மற்றொருபால் அதே இடங்களில் இருந்த 'வானரர்' என்னும் வகுப்பார் பிராமணரோடு கூட்டுறவு கொண்டனர். இவ்விரு வகுப்பாரும் சரித்திர சம்பந்தமானவர் (historical tribes) என்பதில் ஐயமில்லை. பாணினி—பர்ஸு (பாரசிகர்), அஸுர (அசிரியர்) இவர்கட்குப்பின்—'இராக்ஷஸர்' என்பவரைக் குறிப்பிடுகிறார். வானரருடைய தலைவருள் வாலியும் சுக்ரீவனும் சிறந்தவர். பிற்காலத்தில் தார்வார் பிரதேசத்தில் அகப்பட்ட சாஸனங்கள் வானர அரச குடும்பங்களைப் பற்றிப் பேசலைக் காண்கிறோம். அவர்கள், தாங்கள் வாலி பரம்பரையினர் எனக் கூறியுள்ளனர். அவர் கொடி குரங்கு (கபி) முத்திரை உடையது. இராமாயண மஹாபாரதங்கள் கதைகளைப் போதிப்பன ஆயினும், அவற்றுள் சரித்திரத் தொடர்பான சில செய்திகளும் உள என்பதை மறுத்தல் ஆகாது. 'பவரின்' என்னும் பிராமணகுரு கோதா

வரி நதிக்கரையில் ஆஸ்ரமம் அமைத்து 16 சீடர்களோடு இருந்தார். அவர் மூன்று வேதங்களில் வல்லவர். ஒவ்வொரு மாணவரும் பல சீடர்களைக் கொண்டனர். அவர்கள் அனைவரும் சடைவளர்த்துத் தோல் ஆசனங்கொண்டு ரிஷிகள் எனப்பட்டனர். இங்ஙனம் பல ரிஷிகள் தென் இந்தியாவில் பிராமண மதத்தைப் பரப்பினர்.

ஜாதிகளின் விரிந்த நிலைமை

பண்டைக் காலத்தில் பிறப்பைக் கொண்டு ஜாதி நிர்ணயிக்கப்படவில்லை. மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் ஒரு சுலோகம் உண்டு. அது, இழிபிறப்புடையோர் பலர் தம் கல்வி ஒழுக்கங்களால் உயர்ந்த ரிஷிகளாக மாறிப் பெயர் பெற்ற கோத்திரங்களைத் தாபித்தனர் என்பதைக் கூறுகிறது வன பர்வத்தில் உள்ள சுலோகம் ஒன்று, வியாசன் மீன்காரிக்குப் பிறந்தான், பராசரன் சண்டாளப் பெண்ணிடம் பிறந்தான் என்பன கூறுகிறது. இங்ஙனம், பண்டைக் காலத்தில் ஜாதிகள் பிறப்பை நோக்கிக் கொள்ளப்பட்டவை அல்ல; அவரவர் கல்வி ஒழுக்கங்களைக் கொண்டே கொள்ளப்பட்டவை என்பன அறியலாம்.

பிராமண ஆதிக்கம் கொண்ட ஹிந்து சமூகம் அந்நியரை எங்ஙனம் நடத்தியது? சாந்திபர்வத்தில் 65-ஆம் அத்தியாயத்தில் மாந்தாதாவுக்கும் இந்திரனுக்கும் உரையாடல் நடந்ததாகக் கூறப்படுகிறது மாந்தாதா (ஆரிய அரசன்), தன் நாட்டில் தாஸ்யர் (அந்நியர்) ஆக உள்ள யவனர், கிரதர், காந்தாரர், சீனர், சபரர், பர்பரர், சாகர் முதலியவரை எப்படி நடத்தல் வேண்டும் என்று இந்திரனைக் கேட்டான். இந்திரன், 'அவர்கள் அனைவரையும் பிராமண மதவிதிகளைப் பின்பற்றிக் காரியங்களைச் செய்யுமாறு தூண்டிப் பிராமணமத ஆட்களாகச் சேர்த்து விடுக' என்று பதில் அளித்தான். 'சாகரும் யவனரும் பிராமணர் கிரியைகளைச் செய்து ஆரியர் உண்கலத்திருந்து உண்ணலாம்' என்று பதஞ்சலியும கூறியுள்ளார். குவாலியர் ஸமஸ்தானத்தில் ஒரு கல்வெட்டுக் கிடைத்தது. அதில், பகபத்ரன் என்னும் அரசன் அவைக்குத் தூதனுக வந்த 'ஹெலியொதோரர்' என்னும் யவனன் வாசுதேவனுக்கு மரியாதை செய்யக் கருடக்கொடி எடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதனுல் அவன் வைணவ ஹிந்துவாக மாறினுன் என்பதை அறியலாம். அவன் அதே சாஸனத்தில் தன்னைப் பாகவதன் என்று கூறிக்கொள்ளலும் கவனிக்கற் பாலது.

அப்ஹிரர், ஹூர்ச்சரர் முதலிய கூட்டத்தார் இந்தியாவி னுள் நுழைந்தவர். அவர்கள் அனைவரும் ஹிந்து சமூகத்துள் கலந்து மறைந்தனர். இவ்விருதிறத்தாரும் பொற் கொல் லரும் வணிகருமாவர்.

சுத்தி இயக்கம்

முஹம்மதியரால் மதம் மாற்றப்பட்ட ஹிந்துக்களை ஹிந்துக்களாக்க 10-ஆம் நூற்றாண்டிலேயே தேவல ஸ்மிருதி, அத்ரி சம்ஹிதை என்பவை வரையப்பட்டன. பிராயச்சித்தம் நடைபெற்று ஹிந்துக்களாகப் பலர் மாற்றப்பட்டனர் என் பதை அக்கால முஹம்மதிய சரித்திராசிரியர்களே குறிப்பிட் டுள்ளனர். பெண்களும் சுத்தி செய்யப்பட்டு மதம் மாற்றப் பட்டனர். கி. பி. 1398-1399-ல் பாமினி ராஜ்யத்தின்மீது தவரிக் பிரிஷ்டஹ என்பவன் படையெடுத்துத் தோல்வியுற் றான். பிரோஜஷா பஹ்மனி என்னும் சுல்தான் 2000 பிராமணப் பெண்களைச் சிறைப்பிடித்தான். உடனே இந்து அரசன் சமாதானம் செய்து, பெண்களை விடுவித்தான். அவர் கள் மீட்டும் இந்து மதத்திற்கு மாற்றப்பட்டார்கள். தேவ லரும் விக்னேஸ்வரரும் (சட்டகர்த்தர்கள்) பிறரால் கொடுக்கப் பட்ட பெண்களையும் கருவுற்ற பெண்களையும் மதம் மாற்றலா மென முடிவுகூறி யுள்ளனர்.

சுருங்கக் கூறின், அந்நியர் இந்து ஆகலாம்; இந்தியாவில் நுழைந்த அயல் நாட்டார் அனைவரும் அப்பழைய காலத்தே பிராமண மதத்தில் கலந்து இந்து சமூகத்தில் இரண்டறக் கலந்து விட்டனர். தம்மளவில் உயர்நாகரிகத்தில் இருந்து பிறரை அநாகரிகர் என்று இழித்துரைத்த கிரேக்கரும் பௌத் தராகவோ வைணவராகவோ மாறினர் என்பது கவனித் தற்குரியது. இந்நிலைமை கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை அஃதா வது முஹமதியர் இந்தியாவில் தலைகாட்டும்வரை இருந்தது. அவர்கள் வந்தபின் இந்துக்கள் முகம்மதியராக்கப்பட்டனர். ஆயினும் அம் முகம்மதியர் மீட்டும் இந்துக்கள் ஆக்கப்பட் டமை மேலே கூறப்பட்டது. எனினும், பிறவியிலேயே இந்து என்னும் இக்காலக் கோள்கை அக்காலத்தே இல்லை.

(தொடரும்)

நூல்களின் இருவகைப் பகுப்பு

[இளவழகனார்]

'உணர்வோம்புத' லிலும் இருவகையுண்டு; ஒருவகை, கருத்துக்களை உணர்வுக்கு ஊட்டுதல் என்பது; அக் கருத்துக் களை ஊட்டும்போதும் உணர்வுக்கு இன்பந் தோன்ற ஊட்டுத லென்பது மற்றொரு வகையாம்.

முதல் வகையிற் 'கணக்கு' 'மருத்துவம்' 'கோள்நூல்' முதலான கலைநூல்களெல்லாமும் அடங்கும். இவற்றை அள வை நூல்கள் எனவுங் கூறலாம். இலக்கணம் என்பதும் அது.

வெறும் எழுத்துக்குஞ் சொல்லுக்கும் அளவைகள் கூறுத லோடுமட்டும் இலக்கணம் முடிந்துவிட்டதாகத் தமிழாசிரியர் கள் கருதவில்லை. இவ்விரண்டுக்கும் வேறாக இவற்றால் உணரப் படும் பொருள்களுக்கு அளவைகள் உரைப்பதும் இலக்கண மாமெனக் கருதி, அவ்வாறே அவர்கள் அப்பொருள்களுக்கும் இலக்கணங்கள் வகுத்திருக்கின்றனர். இப்பொருளிலக்கணங் களின் விரிவே கலைநூல்களாம்.

பொருளிலக்கணங்கள் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என்னும் முத்தமிழ்க்கும் உண்டு. இம் முத்தமிழ்ப் பொருளிலக்கணங்களுள் எல்லாக் கலைநூல் விரிவுகளும் விதை களுள் மரங்கள்போல அடங்கியிருக்கின்றன எனலாம். தமிழறி ஞர்களின் நன்முயற்சிகளி லொருபகுதி இவ்வகையிற் செல்லு மாயின், கிடைத்தவரையில் இப் பொருளிலக்கணங்களை அடிப் படையாக வைத்துக்கொண்டு, பிறமொழிக் கலைநூல்களின் றுணைபற்றியும் மெய்யுணர்வு வாய்ந்த சான்றோர்களின் உதவி கொண்டும் பெரும்பாலும் எல்லா வகையான கலைநூல்களையுந் தமிழில் ஓரளவில் உருவாக்கிவிட இடமுண்டு. தமிழகம் செய்த தவப்பயனாகச் சின்னாட்களுக்குமுன் திகழ்ந்த அரிய தமிழ்க் கலைஞர் திரு பா. வே. மாணிக்க நாயகரவர்கள் முதலானோ ரது உழைப்பு இத்துறையில் அளவுபடாக் காதலோடுஞ் சென் றது. அவ் வரிய உழைப்பும் உணர்ச்சியுந் தமிழகத்தில் வாளா நில்லாமல், மேல் ஆக்கங்கட்கு இடஞ்செய்தே வருகின்றன.

இங்ஙனமாகக், கலைக்கருத்துகளாகிய பொருள்களுக்கு அளவைகள் கூறி, அக்கருத்துக்களை எழுத்தாலுஞ் சொல் லாலும் உணர்தற்குரிய முதன்மைப் பொருள்களெனக் கொண்டு தமிழில் விரிவான பொருளிலக்கணங்கள் அமைத்த திறம், பிறமொழி யாசிரியர்களுக் கெல்லாம் இல்லாமல் இங்ஙில

வுலகத்தில், தமிழாசிரியர்களுக்கு மட்டுமே அமைந்த தனித் திறமாயிருக்கிறது. ஆகவே, வெறுங் கலைநூல்களெல்லாம் இலக்கண நூல்களே என்பது நன்கு துணியப்படும்.

இனி, அக்கலைக் கருத்துகளை உணர்வுக்கு இன்பந் தோன்றும் முறையில் ஊட்டும்போது, அங்ஙனம் ஊட்டுதற்காக இயற்றப்படும் நூல்கள் இலக்கியங்கள் ஆகின்றன. ஆசிரியர்கள், தாமே ஒரு சுவையுணர்வில் நிற்குங்கால், அவர்கள் மாட்டிருந்து வெளிப்படும் நூல்களும் பிறர்க்குச் சுவை பயப்பனவாகவேயிருக்கும்.

எனவே, எல்லா வகையான நூல்களும் இலக்கணம் இலக்கியம் என்னும் இருவகைப் பகுப்புகளாகப் பிரிந்து நிற்றல் இனி ஐயுறவின்றிக் கண்டுகொள்ளப்படும். இவ்வழகிய பகுப்பினையே தெய்வப் பெரியார் திருவள்ளுவர்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்று மிகப் பொருத்தமாகப் பகுத்து அருளிச்செய்வாராயினர்.

இவற்றுள், 'எண்' என்பது அளவை, அதாவது இலக்கணம்; 'எழுத்து' என்பது (Writings) நூல்; அதாவது இலக்கியம். உலகத்தில் இலக்கியங்களே முதன்முதல் இயற்கையாக எழுகின்றன. பின்பு, அவற்றின் கருத்துக்களை மட்டும் வடித்தெடுத்துச் சுருக்கமாகவுந் திட்டமாகவும் முதிர்ந்த அறிஞர்கட்கு மேலுமேலும் ஒரு தெளிவு செய்யும்பொருட்டு இலக்கண நூல்கள் அமைக்கப்படுகின்றன. இங்ஙனம் இலங்கியங்களிலிருந்து இலக்கணம் எடுக்கப்பட்டமையால், அதன் முதன்மை கருதி முதலில் அதனை 'எண்' என்று நிறுத்தி, அஃது எடுக்கப்பட்டமை தோன்ற, வாளா 'எழுத்து' என்னாது, 'ஏனை எழுத்து' என்றும் ஆசிரியர் அருளிச்செய்தார்.

இங்ஙனமாக இலக்கண நூல்களில், உளநூல், உயிர்நூல், இசைநூல் முதலான கலைநூல்களெல்லாம் அடங்கும்படி, நூல்கள் பொதுவாக இலக்கணம் இலக்கியம் என்னும் இருவகைப் பகுப்புகளாகப் பண்டைக்காலந் தொட்டே தமிழாசிரியர்களால் இயற்றப்பட்டு வந்தமையாற்றான், ஒருவர் இலக்கண இலக்கியங்கள் படித்திருக்கின்றாரென்றால், அவர் ஓரளவிற் பல வகையான கலைநூலறிவுகளும் (General qualification) ஒருங்குபெற்றிருக்கின்றாரென்று முன்னோர் மதித்துவந்தனர்

இலக்கண நூல்களைக் கலைநுட்பங்கள் தோன்ற மாணுக்கர்கட்கு ஆராய்ச்சிமுறையிற் கற்பிக்கத் தமிழாசிரியர்கள் முயன்றுவந்தால், இஞ்ஞான்றுந் தமிழ்மட்டுமே பயில்வோருங்கூடச் சிலநாட்களிற் கூடியவரையிற் கலையறிஞர்களாகவும் விளங்குதல் கூடும். தமிழ்க் கல்லூரிகளும், தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் முதன்மையாய் இவற்றிற் கருத்திருத்துதல் நன்று.

தமிழ்மறைச் சிங்கம்

[திரு. மாடபூசி ரே. திருமலை அய்யங்கார்]

“ காரகொண்ட மேனியன் பாதாம்புயத்தைக் கருத்தில் வைத்து
ஏர்கொண்ட கீர்த்தி யிரா மாநுசனைச் சிரத்திற்றெழும்
சீர்கொண்ட தூப்புற்றிரு வேங்கடாரியன் சீர்மொழியை
ஆர்கொண்டு போற்றினுமம்மால் பதத்தை யடைவிக்குமே.”

—தேசிகன் தனியன்.

“ மறைமுதற்கிளந்தவாயான் மதிமுகிழ் முடித்தவேணி, இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணம் செய்யப்பெற்றே, அறை கடல் வரைப்பிற்பாடை யனைத்தும் வென்றாரியத்தோ, டுறழ்தரு தமிழ்த் தெய்வத்தை யுண்ணினைந்தேத்தல் செய்வாம்.” தமிழணங்கின் சீர்மையை நாடும் நகரமும் நன்கறிய நற்றொண்டாற்றி வரும் “செந்தமிழ்ச் செல்வி” இச்சிறு கட்டுரையையும் இனிது ஏற்று மிளிர்வாளாக. முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமர் தமிழன்பனின் மழலைச் சொற்களையும் கேட்டின்புறுவர் என்பது ஒருதலை.

அகாரவாச்யனே ஆதியம் பகவன். அவனே வாலறிவன், வேண்டுதல்வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், எண் குணத்தான். அவன் நற்றாள் தொழுதெழலே கற்றதனாலாய பயன், அவனது அடியே மாணடி. அத்தாளை வணங்காத தலை பயனில்லை. இச்சிறந்த உண்மையினை இச் செந்தமிழ் நாட்டிற்றிகழ்ந்து விளங்கிவரும் இருபெருஞ் சமயங்களான வைணவ சைவ சமயகுரவர்களும் பரமனடியார்களும் கட்டெழில் வாசகங்களில் செவ்வனே அமைத்துள்ளார்கள். அவற்றிற் சில வருமாறு :—

(1) " செய்ய சுடராழியான் அடிக்கே " —(பொய்கையார்)

(2) " பரிசு நறு மலரால் பாற்கடலான் பாதம் " —(பூதத்தார்)

(3) " இன்றே கழல்கொண்டேன் " —(பேயாழ்வார்)

(4) " துயரறு சுடரடி தொழுதெழு " —(நம்மாழ்வார்)

(5) " உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு " —(விண்டுசித்தர்)

(6) " அம்மான் தன்னடி யிணைக்கீழ் மலர்களிட்டு "
—(குலசேகரப் பெருமாள்)

(7) " திருக்கமல பாதங்கள் வந்தென் கண்ணி
னுள்ளன வொக்கின்றதே " —(திருப்பாணாழ்வார்)

(8) " கற்றினம் மேய்த்த வெந்தை கழலிணைப் பணிமினீரே "
—(தொண்டரடிப் பொடியாழ்வார்)

(9) " உன்ன பாதமென்ன சிந்தை மன்ன வைத்து நல்கினாய் "
—(திருமழிசை வந்த சோதி)

(10) " தளிர்புரையும் திருவடி என் தலைமேலவே "
—(திருமங்கை மன்னன்)

(11) " கேசவ நம்பியைக் கால்பிடிப்பா
ளென்னு மிப்பேறெனக்கருள் செய் "
—(சூடிக்கொடுத்த நாச்சியார்)

(12) " நமச்சி வாய வாஅழ்க நாதன் றாள்வாழ்க "
—(ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்)

(13) " மற்றுப்பற்றெனக்கின்றி நின்றிருப்
பாதமே மனம் பாவித்தேன் "
—(ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்)

(14) " பூமான்கழல் புனைசேவடி நினைவார் வினையிலரே "
—(திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்)

(15) " கண்டேனவா திருப்பாதங் கண்டறியாதன கண்டேன் "
—(திருநாவுக்கரசு சுவாமிகள்)

(16) " வாழ்கவே வாழ்க நம்நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மல மறுத்தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தான்றாள்
வாழ்கவே வாழ்க மயமிலான் பாதமே."
—(திருமூல நாயனார்)

(17) " முருகனே செந்திமுதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகை முகன்

தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னுன்" —(நக்கீரதேவ நாயனுர்)

" அம்பலத்தாடுவான்
(18) மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"
—(சேக்கிழார் நாயனுர்)

(19) "மெய்ந்நெறி நன்மையன் பாதமல்லது
பற்றிலர் பற்றிலார்" —(கம்பநாடர்)

(20) "தேடிய வகலிகைசாபந் தீர்த்ததா
ணீடிய வுலகெலா மளந்து நீண்டதா
ளோடிய சகடிற வுதைத்துப் பாம்பின்மே
லாடியுஞ் சிவந்ததாளென்னை யாண்டதாள்"
—(ஸ்ரீ வில்லிபுத்தூரர்)

(21) "கண்ணகன் ஞால மளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ—நண்ணிய
மாயச் சகட முதைத்தூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ணனடி" —(நல்லாதனுர்)

(22) "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனுர் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா னூற்றிசையும் போற்றத்
தொடர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானையேத்தாத நாவென்னநாவே
நாராயணுவென்னு நாவென்ன நாவே"
—(இளங்கோவடிகள்)

இங்ஙனம் கூறியவற்றின் ஆழ்பொருள்களைத் திரட்டி ஒரு தமிழ் நாவலர் ஒரு தீங்கவியாற் பாடியுள்ளார் அவர் அருளிய பாசுரத்தினடி அடைவு கீழே காட்டப்பெறுகின்றது.

அடியவர் மெய்யர் மலர்ப் பதங்கள்
(1) ஒரு மதியன்ப ருளங் கவர்ந்தன.
(2) உலக மடங்க வளர்ந் தளந்தன.
(3) ஒரு சடை யொன்றிய கங்கை தந்தன.
(4) உரக படங்க ளரங்கு கொண்டன.
(5) தரும முயர்ந்ததென்ன நின்றன.
(6) தருமனிரந்த திசைந்து சென்றன.
(7) சகடமுடைந்து கலங்க வென்றன.
(8) தமர்களருந்து மருந்தென்பன.
(9) திருமகள் செய்ய கரங்கணொன்றின.

(10) திகழ்துளவுந்து மணங் கமிழ்ந்தன.
(11) செழுமணி கொண்ட சிலம் பிலங்கின.
(12) சிலை தனிலன் றொரணங் குமிழ்ந்தன.
(13) அருமறையந்த மமர்ந்த பண்பின.
(14) அயன் முடி தன்னி லமர்ந் துயர்ந்தன.
(15) அருள்தர வெண்ணிய யிந்தை வந்தன.

இவ்விதமாகச் செவ்விய திருப்பாட்டுப் பாடியவர், "கவிவாதி சிங்கம்"; "வேதாந்த தேசிகன்"; "தூப்புற் பிள்ளை" என்று சிறப்புற்று விளங்கிய "தமிழ் மறைச் சிங்கம்."

கல்வியிற் பெரிய கம்ப நாடர் ஓவியத் தெழுத வொண்ணு உருவத்தனை இராமபிரானை,

"அஞ்சனக் குன்ற மன்ன அழகன்";
"அந்தமில் அழகன்";
"அல்லையாண் டமைந்த மேனி அழகன்";
"மையோ மரகதமோ மறி கடலோ மழை முகிலோ
அய்யோ விவன் வடிவென்ப தொரழியா வழகுடையான்"
"அகத்துறை யழகன்"

எனக் கூறி மகிழ்கிறார். இத் "தமிழ் மறைச் சிங்கம்",

"அஞ்சனமுங் காயாவு மனையமேனி
யடியவர்க்கு மெய்யனே யயிந்தை வாழும்
அஞ்சலென வருள்பொழியும் வள்ளலே நின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே" —(நவமணிமாலை 6)

என்றும்;

"மையுமா கடலு மயிலுமா மழையு
மணிகளுங் குவளையுங் கொண்ட
மெய்யனே யடியோர் மெய்யனே விண்ணோர்
ஈசனே நீசனே னடைந்தான்
கையு மாழியுமாய்க் களிறு காத்தவனே
காலனார் தம ரென்னைக் கவராது
ஐயனே வந்தன் றஞ்ச லென்றருளென்
னயிந்தைமா நகரமர்ந்தானே" —(நவமணிமாலை 7)

என்றும் விண்ணப்பித்தல் ஒப்ப நோக்கி மகிழ்தற்குரியன.

"கோதவ மொன்றில்லாத தகவே கொண்ட
கொண்டலென வந்துலகில் ஐவர்க்கன்றோர்
தூதுவனு யொருகோடி மறைக ளெல்லாந்
தொடர்ந்தோடத் தனியோடித்துயரந் தீர்த்த மாதவனூர்"
—(பரமதபங்கம் 53)

என்ற தூப்புற்கோன் பாசுரவடிகள்,

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனூர் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர் பாலூற் றிசையும் போற்றத்
தொடர்ந்தாரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது நடந்தானை"

என்ற இளங்கோவடிகள் திருவாக்குடன் ஒப்பிடத்தகும்.

"புல்லிய சொல்லும் பொருளும் போலவும்;"

என்ற பழம்பாடல் உவமைக் கருத்தை

"திருவுரையாய்த் தாம்பொருளாய் நிற்பார் வந்தார்"
—(திருச்சின்னமாலை 2)

என்று "சந்தமிகு தமிழ்மறையோனை" இக் கவிவாதி சிங்கம் விளக்கியிருத்தல் வித்தகர் கண்டு களிக்கும் பெற்றியது.

உரையாசிரியற்றலைவரான பரிமேலழகியாரை

"அத்திகிரி யருளாளப் பெருமாள் வந்தார்
ஆனை பரிதேரின் மேலழகர் வந்தார்" —(திருச்சின்னமாலை 10)

என்ற திருப்பாசுரத்தில் வைத்துப் போற்றியுள்ளார் இத்தமிழ் மறைச் சிங்கம்.

"துய்ய தமிழிருபத்து நான்கிற் பாட்டின்
தொகை நாலாயிரமுந் தொங்கல் மூன்றே"
—(பிரபந்தசாரம் 17)

என்ற வடிகளில் இவர் "கம்பநாடரை"க் கொண்டாடியுள்ளது உற்று நோக்குவார்க்கு நன்கு புலனாகும்.

"தேசிகமாலை" என ஆன்றோராற் புகழப்பெற்று வரும் இத்தமிழ் மறைச் சிங்கத்தின் திருப்பாசுரங்களைத் தெளிய வோதித் தெளியாத பழமறை நிலைகள் தெளிவோமாக. தூப் புற்கோன் தூமொழி வாழ்க. ஆழ்வார்கள் அருளிச்செயலை "செய்யதமிழ் மாலைகள்" என்றும், "தூயதென் மறை" என்றுங் கூறி மகிழ்வர் இச் செந்தமிழ்ச் சிங்கம். "செந்தமிழ்ச் செல்வி" மேன்மேலும் சிறப்புடன் இந் நானிலத்தில் நன்கு நிலவுக. செந்தமிழ் வளர்க. பொங்கும்மங்களம் எங்குந்தங்குக.

அறிவுநூற்கலையும் சமயமும்

[திரு. T. S. கந்தசாமி முதலியார், B. A.]

வடமொழியாளர் 'விஞ்ஞான' மென்றும், ஆங்கிலர் 'ஸைன்ஸ்' என்றும் சொல்லும், கலைப்பகுதியைத் தமிழர் அறிவுநூற்கலை யென்பர். இக்குறியீடு சிறிது நீட்சியுடைய தெனக்கருதும் தமிழர், அக்கலைப்பகுதிக்கு 'அறிவம்' எனக் குறியிட்டாளின், மகிழ்வர். ஆனால் 'அறிவம்' என்ற சொல் புதிய சொல்லாதலின், ஆன்றோரால் பயிலப்படுமுன், புதுமை யுடையதாய் தோற்றும், 'விஞ்ஞானம்' 'என்ற வடமொழியும் அப்பொருட்டாதல்காண்க. 'அறிவம்' என்ற சொல் சுருங் கச்சொலல் வனப்புமுடையது. கலைச்சொல்லாக்கக் கழகத்தா ராகிய உங்கள் முன்பு கூறப்படுவதால், உங்கள் உடன் பாட்டையும் அது பெறுமாயின், அறிஞர் உலகத்தில் இன்று முதல் உயிர்பெற்றுலவும். அங்ஙனம் சொற்கலையாக்கிக் கோடல் தமிழர் தொன்மையொடுபட்டு நிற்கும்.

'அறிவம்' பெரும்பாலும் மேல்நாட்டிற்றோன்றி அந்நாட் டாரால் பேணப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகிறது. அறி வம் பலப்பலப் பகுதிகளையுடையது. நாடோறும் வளர்கிறது; பல்கவும் செய்கின்றது. ஒரு கலையாயது, பலவாய்ப் பல்கி வருகின்றது. அது காட்சியளவையை மெய்யாகக்கொண்டு, ஆராய்ச்சியறிவாற் காணப்படும் உண்மைகளைப் பலபடப் பகுத்து அறியும் கலை. பொருட்டிறத்தின் வேறுபாட்டால் அக்கலை பல பிரிவுகட்குட்படும். கலைகள் பலதிறப்படினும் அவற்றிற்பெரும்பாலனவற்றிற் குடம்பாடான சில பொது வுண்மைகளை யீண்டு அறிவம் எனக் கூறப்படுகின்றது. அது பெரும்பாலும் காட்சியளவைக் கெட்டாததைத் துணிபொரு ளாகக் கொள்ளாது. உலகம் யாவையும் தனதாய்பொருளாக அறிவம் கொண்டுளது. ஆய்பொருளின்கண் மெய்யறி நிகழ்ச் கள் நிகழ்த்தி, ஆய்வுசெய்து, முடிபறிவது அறிவத்தின் முறை. அறிவம் பலகலைத்துறைகளில் வளப்பம் பெற்று, இன்று அரியாசனத்தின் முடியுடையரசியாக விளங்குகிறாள்.

அறிவமும் சமயமும் தம்முட் பிணக்குடையன. சமயத் தையும், சமயத்தோரால் பரவப்படும், இறையையும், முறையே பழித்தும் மறுத்தும், அறிவம் கூறுகின்றது. சமயக்கணக்கர் ஓதும் முறைகளையும், கொள்கைகளையும், ஐயுறுவதன்றிப் பொருளொடு பொருந்தாதனவென அவற்றை அது மதிப்பது மில்லை. பகுத்தறிவு தனதுடைமைப்பொருள் எனவும், சமயக்

கணக்கர் அவ்வழியைப்பின்பற்றாது அதனோடு பொருந்தாத வற்றையும் உண்மையென அவர் கொள்வர் என்றும் தூற்று கின்றது. 'எமக்கார் இணையென்று' இறுமாந்து செருக்குடன் நிமிர்ந்து நடக்கின்றது. தானறியாத பொருள், இல்லவே இல்லையெனவும்; தன்னால் அறியப்படாதாயின், அது உண் பொருளில்லை யென்றும் கூறும். அது நுண்மாண் நுழை புல முடையது. புலம் எனினும் அறிவுஎனினுமொக்கும். அது சிறப்பால் முக்கூற்றுத்தன்மை யுடையது. நுண்பொருள் எவற்றினும் நுண்ணியது. பெரும்பொருளான எவற்றினும் பெரியது. கடினப்பொருள் எவற்றினும் கடினமாய், எக் கடினப்பொருளையும் ஊடுருவிச்சென்று உண்மைகாணவல்லது. சில்லாண்டுகள்வரை காணப்படும் பொருள்கள் எல்லாம் காரியப்பொருள்கள் என்றும், அவைகள் அணுக்களான முதற்பொருளால் ஆக்கப்படுவனவென்றும் அறிவர் கருதினர். அண்மையில் காலஞ்சென்ற ரதர்போர்டு பெருமான், அவ் வணுவுளளும் சென்று, நுனித்தாராய்ந்து, அதும் காரியப் பொருள் என்றும், அது, உடன்பாட்டு மின்னம், எதிர்மறை மின்னம், முதல் என்று மூன்றன்கூட்டம் என்றும் கண்டார். நுண்ணிய அணுவினும் நுணுகிச்செல்லும், நுண்புல முடையது அறிவமாதல் காண்க.

அது நுண்மாண் நுழைபுலமுடையது; விண்ணிற்காணப் படும் கோள்களாகிய ஞாயிறும் திங்களும், பிறவும், ஆரல் முத லாய மீன்களும், விண்ணிடை நிற்பனவும் சரிவனவுமாயுள்ளன. நிலவுலகத்தில் உள்ள நம்மிடை அவற்றிற்குண்டாய தொலைவு எண்ணினுமடங்காது. அவற்றின் பருமையும் கருத்திலடங்காது. அவற்றையும் ஆய்பொருளாகக் கொண் டது அறிவம். கையகத்துள்ள சிறு பொருளாயினும், அத னியல்பை முழுதற ஆராய்வ தென்றாலே எளிதன்று அங்ஙன மிருக்க, விண்ணிடை யிருக்கும் மீன்கள், கோள்கள் ஆய வற்றின் இயல்புகளை ஆராய்வதெனின், அது மேதக்க செய லாகும். அவ்விண்பொருள்களையும் அறிவம் ஆராய்ந்து, வெளி யிட்டிருக்கும் பொருளின் மாட்சிகளை அறிஞர் உள்ளவாறு காணின், அறவத்தின் மாட்சியினை வியவாதிரார்.

வையகத்துள்ள சிறுபொருளைக் காண்போரினும், சிறக்க விண்பொருள்களைத் தெள்ளத் தெளிய ஆராய்ந்து, மெய்ப் பொருள்களை வெளியிட்டுள்ளது. சிறு வெண் புள்ளிகள் போல் வானிடை காணப்படும், வான வெள்ளிகளையும் தன் துணையெனக் கணக்கிடத் துணிந்துளது. ஒரு விண் மீனுக்கும்

மற்றொன்றிற்கு முள்ள தூரத்தை இவ்வளவினது என்று, அறுதியிட்டும் கூறுகின்றது. அவ்விடை பலநூறாயிரம் மைல்களுக்குக் குறைந்ததில்லை என்பர். வானிடை எழுந் திங்கள் மக்கள் உள்ளத்தை என்றும் கவர்ந்துள்ளது அதன் குறுக்களவு 2163 மைல் என்பர். ஞாயிறு 865,000 மைல் குறுக்களவுடைய தென்ப. ஞாயிற்றுள், 6 கோடியே 40 லக்ஷம் திங்கள்களை யடக்கலா மென்பார். அது மணி ஒன்றற்கு 2287 மைல்கள் வீதம் வேகத்துடன் செல்கின்றது. நிலத்தின் நிறையில் $\frac{1}{77}$ நிறையுடையது திங்கள்; 2,50000 (இரண்டரைலக்ஷம்) மைல் தொலைவில் உள்ளது. ஞாயிறு பெரிது. ஆயினும் அதனினும் பெரிய விண்மீன்கள் உள்ளன. கேட்டை என்ற மீனை நம்மனோர் அறிவர். அது தேள் கூட்டத்தில் உள்ளது. அது செந்நிற முடையது நம் ஞாயிற்றை அக்கேட்டையின் நாப்பண் வைத்தால், அது அறுகின் நுனியனையதாய்த் தோன்றும். அவ்வுண்மையையறிந்த வடவர் அதற்கு 'ஜேஷ்டா' எனப் பேரிட்டனர் போலும். அதனுள், செவ்வாயும் நிலமும் சேர்ந்து தத்தம் வட்டமிட இடமுளதோடு வேறு வேற்றிடமுமுளதென்பர். ஓரியன் கூட்டத்தில் உள்ள ஆதிரை மீன் 25 கோடி மைல் குறுக்கள வுள்ளதென்பர். கேட்டை, ஆதிரையின் இன்னும் அரைமடங்கு பெரியது. அது 40 கோடி மைல் குறுக்களவுடைய தென்பர். ஞாயிற்றின் வெப்பம் 6000 °C என்பர். ஆதிரையை ஞாயிற்றின் இடத்தில் வைத்தால், அது செவ்வாய் வழிவரையும் செல்லும் என்பர். ஒளி ஒருநொடிக்கு ஒரு நூற்றெண்பத்தாறா ரம் மைல் விசையில் பாய்கிறதென்பர். ஆதிரைக்கும் நம் நிலமண்டிலத்திற்குமுள்ள தூரம், பல்கோடி மைல்கள் என்பர். அத் தூரத்தை மைல் கணக்கில் சொல்லின் நன்றாக உணரப்படாது, கேட்பார் கணிதவுணர்வும் வியப்பால் தடைப்படுமாதலின், ஒளிக்காலத்தில் கூறுவர். ஞாயிறு நிலத்திலிருந்து 9 கோடியே முப்பதுலக்ஷம் மைல்தூரத்திடை யுள தென்பர். அதனை ஒளிக் காலத்திடைச் சார்த்திக் கூறின், ஒளி நிமிடம் 8 தூரத்தில் உள தென்பர். அங்ஙனம் ஒளிக்காலத்தொடு சார்த்திக்கூறின் பால்வெளியிலுள்ள வெள்ளிகள் 900,000 ஒன்பது லட்சம் ஒளியாண்டுகட்கப்பாலுள்ளன வென்பர். அஃதாவது இன்று (nebube) புகைமீன்செறிவிலுள்ள ஒரு விண்மீன் மாய்ந்தொழியினும், அதன் ஒளி இன்னும் 9 லக்ஷ வருஷங்களுக்கு நிலவுலகத்தைச் சாருமெனக் கோள்களின் இயல்பையும், அமைப்பையும், இன்னும் அவைகளின் வேறுபல சிறப்பியல்புகளையும் அறிவர் அறிந்து கூறுவர். மீன்களிற் சில சிவந்தன, சில ஆரஞ்சு நிறமுடையன,

சில மஞ்சள் நிறமுடையன, வேறுசில வெள்ளியன, வேறுசில நீலமும், வெண்மையும் கலந்தன. அவை,முறையேவெப்பத்தால் 2000—3000°c; 4000°c, 5000--6000—°c; 8000—11000°c 15000°c. வரையுள்ள எனவும் அறிவர் கூறுவர். நிலந்தோன்றி 200 கோடி ஆண்டுகள் ஆயின என்ப. ஒரு நீர்த்துளியை நிலவுலகெங்கணும், சமமாகத் தெளித்தால் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும், 1600 நீர் அணுத்திரள்கள் (molecuels) விழுமென்ப, அண்டங்களையும் அகிலாண்டங்களையும் அளந்தறியும் பெருமை அறிவத்திற்கே யுரிய தன்றோ?

சில பொருள்களை ஊடுருவி நோக்கமுடியும், வேறு சிலவற்றை அங்ஙனம் நோக்குதல் முடியாது. சில பொருள்கள் வேறு சிலவற்றால் உடைத்தல் அமையாது. எடுத்துக்காட்டாக; வயிரத்தைக் கல்லால் பிளத்தல் முடியாது. இரும்பாலும் முடியா என்ப. ஆயினும் அத்தகைய பொருள்களினூடும் ஊடுருவிச் சென்று துருவி யுண்மையை யாராயவல்லது அறிவமாகும். மக்கள் உடலுள் கிடக்கும் பொருள்களையும் படம் பிடித்துக்காட்டும் வன்மை, அறிவத்திற்கேயுரியது. ஊடுருவலாகா வயிரத்தின் இயல்பையும் ஊடுருவிக்காணவல்லதும் அஃதே. நுழையாவிடத்தும் நுழைந்து பொருளியல்பை ஆய்ந்து அளந்து அறியும் திறமையுடையது அறிவு. ஆதலின் அறிவம் நுண்மாண் நுழைபுலமுடையதாயிற்று.

மக்கட்கு அது அளப்பரும் நன்மைகளைச் செய்துளது. நாம் வாழும் இக்காலம் விஞ்ஞானகாலம். நம்மைச் சுற்றிலும் பார்க்கின் விஞ்ஞானம், தொழில்கள் பலவற்றை வளம்படுத்தியும், நடைமுறையில் அன்றாட வாழ்க்கையில் பலவற்றிலும் தலையிடுவதையும் காணலாம். தொழிற்சாலைகளிலும, தொழில்களிலும் மட்டுமன்றி, நம் வீட்டிலும், விளையாட்டிடங்களிலும் நமக்கு அது குற்றேவல் செய்கின்றது. அறிவம் நடனம் செய்யும் மேல்நாட்டுகளில், அந்நாட்டுமக்கள் தம் காலையுணவை ஆராயினும், மின்னத்தானும் சமைக்கின்றார்கள். வீட்டின் குப்பையை, காலால் துடைப்பத்தால் போக்கித் தூய்மைப் படுத்துகின்றார்கள். மின்சார நெருப்பும், மின்சார விளக்கும், மின்சார எஃகும் வீட்டில் உள்ளன. வேலையொழிந்த நேரங்களை விநோதத்தில் கழிப்பதற்கு, ஒலிமுழக்கிகள் என்னும் (Gramophone)களும், வானிழல் கருவிகளும, பேசும், படங்களும் விஞ்ஞானத்தால் படைக்கப்பட்டு உதவப்பட்டுள்ளன. மேல் நாட்டு, படக்காட்சிசாலையில் உள்ளே உள்ள காற்று சில விநாடிகட்கொருமுறை மாற்றப்படுகிறது.

உள்ளே உள்ள காற்று இனிமை பயக்குமாறு, கால்நிலைமாற்றி என்னும் பொறியால் (air-conditioning plant) கோடையில் குளிரச்செய்தும், கூதிரில், வெதும்பச்செய்தும் அறிவம் தொண்டுபுரிகின்றது. விஞ்ஞானம் ஒவ்வொரு மகனையும், சென்றடைந்துளது. காலால் நடந்தும், குதிரை முதலிய விலங்குகளில் ஊர்ந்தும், வழிச்சென்றவன், இன்று காற்றினும் வேகமாக விரைந்தோடும், தடியங்கி முதலிய நில ஊர்திகளிலும், அதனினும், வேகமாகப் பறக்கும் வான ஊர்திகளிலும் செல்கின்றான். அது ஒவ்வொருவர் கொள்கைகளையும் மாற்றுகின்றது. நிலம் உருண்டையாயுளதென்றும், வானம் வெளியென்றும், எண்ணுகிறான். விலங்கு வழிவந்தார் மக்கள் என்றும், மக்களியற்கையை உயிர் நூலறிந்த வழிகளால் பலவாற்றானும் வளம்படுத்தலாமென்றும் மக்கள் எண்ணத் தலைப்பட்டுள்ளார்கள். தற்கால நாகரிகமே அறிவம் தந்ததாக உள்ளது. ஆதலின் மக்கள் வாழ்க்கையை புனிதப்படுத்தி, வளம்படுத்தி, வாழ்க்கையின் பயனை முற்றினும், அடையச்செய்யும் கருவி அறிவம் என அறிவர் முழங்குகின்றனர். உகலம் தொன்றுதொட்டுக் கொண்ட கொள்கைகளை ஐயுறுமாறும், அவற்றைக் கைவிடுமாறும் அது செய்கின்றது. சில கொள்கைகள் குடிபுகுந்திருந்த நெஞ்சங்களில், அவற்றிற்குப் பதிலாக வேறுகொள்கைகளை நாட்டிவேர்க்கொள்ளவும் செய்கின்றது. இவற்றினும் சிறந்த தொண்டை அறிவம் புரியவல்லது.

(தொடரும்)

செய்திகளும் குறிப்புக்களும்

வார்தா ஹிந்தி

வார்தாத் திட்டத்தைக் கொண்டு பொரிக்கப்போகும் இந்துஸ்தானிக்குஞ்சு ஒரு பலபட்டடைக் குஞ்சேயாகும். மொழித்துறையில் தோற்றுவிக்கப்படும் இராட்சசப்பிறப்பென்றே அதனைச் சொல்லுதல்வேண்டும். சிறிதும் ஈவிரக்கமின்றி அதனை முளைக்கும்போதே நசுக்கி யழித்து விடுதல் வேண்டும். அதுமட்டுமா? ஒவ்வொரு இந்திய மொழியிலிருந்தும்—அது மண்டில மொழியாயினுஞ்சரி, உண்ணாட்டு மொழியாயினுஞ்சரி—அராபி அல்லது ஆங்கிலம்போன்ற பிறமொழிச் சொற்களில் இன்றியமையாதன வல்லாதனவான சொற்களையெல்லாம் கட்டோடு ஒழித்துவிடுவது நமது தலையாய கடமையாகும். இவ்வாறு கூறுவதனால் நாம் ஆங்கிலத்திற்கோ

அன்றி வேறெம் மொழிக்கோ எதிரிடையாக இருப்பதாகக் கருதிவிடுதல் கூடாது. ஆங்கிலத்தைப் பொறுத்தமட்டில் அதனைக் கற்பது இன்றியமையாத கடமையாகும் என்று வற்புறுத்திக்கூறுகிறேம்; அன்றியும் உலக இலக்கியப் பெட்டகங்கள் யாவற்றிற்கும் அஃதொரு திறவுகோலாகும். ஆனால் அக்காரணங்கொண்டு நம் சொந்த மொழியில் பிறமொழிச் சொற்களைக் கேள்விமுறையின்றிக் கலக்குமாறு விட்டுவிடுதல் கூடாது. ஒவ்வொரு பிறமொழிச் சொல்லையும் ஆராய்ந்து அஃது இன்றியமையாது வேண்டப்படும் என்று கண்டாலொழிய அதனை நம் மொழியிற் கலக்க விடாமல் தடை செய்தல் வேண்டும். வங்காள மண்டிலத்திலுள்ள இந்து மக்களை நாம் சிறப்பாகக் கொண்டாடுதல் வேண்டும்; ஏனெனில், வங்காள இலக்கியங்களில் கவையற்ற பிறமொழிச் சொற்களின் கலப்புக் கிடையவே கிடையாதாகலின். இது மிகவும் வியந்து பாராட்டற்குரியதாம். ஏனைய மண்டில மொழிகளையும் இலக்கியங்களையும் பற்றி இவ்வாறு பாராட்டுதற்கில்லை.

—வி டி. சவர்க்கார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதிக்குழுவிற் பண்டிதராயிருந்த இலக்கண விளக்க ஆசிரியர்பரம்பரை திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் அவர்கள் சென்ற 25-12-1940 திங்கட்கிழமையன்றிரவு இறைவன் தண்ணடிநீழல் எய்தினமைகேட்டு மிகவும் வருந்துகிறேம், தமிழ்ப்புலமையும் ஆராய்ச்சித்திறனும் ஒருங்கமைந்த அப்பெரியாரின் பிரிவு தமிழ்நாட்டிற்கு ஒரு குறையே யாகும்.

குலசேகரன் பட்டினம் தாயம்மாள் பள்ளிக்கூடமும் வள்ளியம்மாள் இல்லமும்

தமிழ்நாட்டின் தவப்பயனாய்ப் பிறந்து, நாட்டிற்கும் மொழிக்கும் இடைவிடாது உழைத்துவரும் தமிழ்ப் பெரியாராகிய திரு சே. தெ-நாயகம் அவர்களின் நன்முயற்சியால் உருப்பெற்ற இவ்விரு அமைப்புகளும் ஒப்பரிய நற்பணியாற்றி வருதல் போற்றற்குரியதாம்.

இந்தப் பள்ளிக்கூடம் இதுவரை துவக்கக் கல்விப் பள்ளிக்கூடமாக (Elementary School) இருந்து வருகிறது. உயர்தரக்கல்வி (Secondary Education) யும் ஆசிரியர் பயிற்சி (Teacher's Training) க்கல்வியும் சொல்லி வைக்கவேண்டுமென்ற பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்க சென்ற சில ஆண்டுகளாகச் செய்த முயற்சி கைகூடாமலிருந்தது. 1940 ஜூனில் இரண்டும் அல்லது இரண்டில் ஒன்றேனும் கைகூடுங் குறிகள் காணப்படுகின்றன. அவைகளுள் ஒன்று தங்கள் மக்களின் கல்விச்செலவில் தாங்களும் உரிய பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் எனப் பெற்றோர்கள் ஊக்கத்

துடன் முன்வந்ததாகும். பெண்கள் படிப்பிற்குப் பெற்றோர்கள் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை என்ற மனப்பான்மை மாறி வருகிறது. அப்படிப் பெற்றோர்கள் செலுத்த வேண்டிய கட்டணத் தொகை அவர்களுடைய நிலைமைக்கு உயர்வாக உள்ளபொழுதும், படிப்பிற்கு வேறு வழியிற் பண உதவி வேண்டிய பொழுதும், பண உதவி செய்யப் பள்ளிக்கூடத்திற் பற்றுள்ள பெரியார்கள் சிலர் மனமுவந்து முன்வந்திருப்பது மற்றொரு நற்குறியாகும். அவ்வித நன்கொடை உதவியிலிருந்தே இல்லத்திலுள்ள மாணவிகளின் இராப் படிப்புச் செலவும் அவர்கள் உடல் நலம் பேணும் சில செலவுகளும் நடந்து வருகின்றன. விரைவில் இசைக்கல்விக்குத் தனி ஆசிரியர் நியமிக்க ஏற்பாடு நடப்பதற்கும் அவர்கள் அரும் உதவியே பெரு முதற்காரணமாகும். அரசியலதிகாரிகள் இதுவரை செய்து வந்ததுபோல் இப்பொழுதும் சளைக்காது செய்துவரும் குன்றாத உதவி மூன்றாவது பெரும் நற்குறியாகும். உயர்தரக் கல்விக்கு (High School Education) முதற்படியாக நடுத்தரக் கல்வி (Middle School Education) யும் ஆசிரியர் பயிற்சிக் கல்வியும் அல்லது இரண்டில் ஒன்று 1940 ஜூனில் துவக்கப்படுவதற்கு வேண்டும் முயற்சிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. இரண்டும் அல்லது இரண்டில் ஒன்றேனும் கைகூடுவதற்கு இந்த முயற்சிக்குப் பெற்றோர்கள் செய்கையில் காட்டும் ஆர்வம் ஒரு அளவு கருவியாகும். விரைவிற் பெற்றோர்கள் தத்தம்மாலியன்ற உதவியைச் செய்ய முன் வர வேண்டுகின்றோம்.

நாள்தோறும் பாடுபட்டு அதில் கிடைக்கும் சிறு வரும்படியிலிருந்து குடும்பத்தைப்பேண வேண்டிய நிலைமை யிலுள்ள ஏழைகளின் மக்களும், பண்ணையார் போன்ற பெரு நிலக்கிழவர்களின் மக்களும், கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர்கள் அல்லாதார்களும், பத்து வயதுச் சிறுமிகளும் இருபது வயதுப்பெண்களும், நாடார்கள், சைவவேளாளர்கள், ஆதிதிராவிடர்கள் முதலிய பல குலப்பெண்களும், பள்ளிக்கூடத்திலும், இல்லத்திலும் சேர்ந்து படித்து வருகிறார்கள். தங்கள் ஊரில் பெண் கல்விக்கும் போதிய வழி இல்லாதவர்களும், தொழிலிடுபொட்டால் வெளியிடங்களுக்குப் போக நேரிடுகிற பெற்றோர்களும், மட்டான செலவில் தங்கள் மக்களைப்படிப்பிக்க, இந்தப் பள்ளிக்கூடமும் இல்லமும் வாய்ப்பான இடங்களாம். 1-9-39 அறிக்கையில் வெளியிட்டபடி பள்ளிக்கூடத்தில் படிப்புக் கட்டணம் மாதம் ரூ. 1-4-0 ஆகவும் இல்லத்தில் இருப்பிடமும் உணவும் ஏழைகளுக்கு நன்கொடையாகவும் கொடுக்கக் கூடியவர்களுக்கு மாதம் ரூ, 2-4-0 ஆகவும் இந்த ஆண்டு முடியும் (1940 மே) வரை இருக்கும். பள்ளிக்கூடமும் இல்லமும் பனிக்கால விடுமுறைக்கு 23-12-39-ல் மூடி 15-1-1940 திறக்கும். பிற விவரம் வேண்டியவர்கள் தபால் வழி அல்லது நேரில் தெரிந்து கொள்ளலாம்.

விக்கிரம வருடவாக்கிய சைவப்பஞ்சாங்கம் வெளி வந்துவிட்டது.
கிளேஸ் தனிப்பிரதி அணா 1½



காஞ்சிபுரம் முத்தமிழ்வள்ளல்
புரிசை. முருகேச முதலியார் அவர்கள்